KALANILAYAM. தனிப்பிரதி ரூ. 0 3

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4] 1931 ௵ பிப்ரவரி ௴ 5௳ [No. 5.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 81
2. அப்பர் (ஜலஸ்தம்பனம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 83
3. மானத சாத்திரம் (புலன்கள்)
T. P. மீனாக்ஷிசுந்தரன் M.A., B.L. 85
4. யாப்பிலக்கணம் (அசை) 86
5. சூளாமணி (உரையுடன்)
நகரச்சருக்கம் (48—56) 88
6. தனிப்பாடல் (முருகன் நாமகள்)
நவாலி க. சோமசுந்தரம்பிள்ளை 91
7. கம்ப ராமாயணம் (கைகேசி சூழ்வினைப் படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 93
8. வர்த்தமானம் 99

கலாநிலயம்

வாழ்வாங்கு வாழ்பவர்.

3.

மகிழ்ச்சியோன்று உறுகின்ற நிலையில் தாழ்மையும் ஒன்று அம் மகிழ்ச்சியின் இதயத்தே கரந்து கிடக்கின்றதென்று சென்றநாள் செப்பலாயினோம். தன்னையே தனித்து நோக்கியேனும் பிறரொடு தன்னை ஒப்பு நோக்கியேனும் மகிழ்கின்ற அவ்விரு வகை நிலைகளிலும் இத் தாழ்மையின் வேடத்தைக் காணலாம். சற்று நாம் இவைகளை உற்று நோக்குங் கால் அவ்விருவகை நிலைகளுக்கும் பொதுவாயிருந்து புரிகின்ற உட்கருத்து ஒப்புமைநோக்க லென்னும் ஊக்கமே ஆவது புலப்படும். அணிகலன்கள் புனைந்து கொண்டு அகமகிழ்வான் ஒருவன் தன்னையே தனிக் கருதிநின்ற நிலையில், அஃது அணியா முன்னம் அவனிருந்த வண்ணமும் அணிந்த பின் இருக்கின்ற வண்ணமும் மாறிமாறித் தோன்றும் விதங்களை ஒப்பு நோக்கிக்கொள்ளுதலே அவனது உள்ளத்தின் இரகசியச் செய்தியாகின்றது. மற்று, அணிகலன்கள் இல்லாத அயலொருவனை முன்னிட்டு அகமகிழ்கின்ற காலத்தும் அவ் வொப்புமைநோக்கலென்னும் காரியம் மனத்தினுள் நிகழ்வது பின்னும் சற்று வெளிப்படையாய்த் தோன்றுவதன்றி வேறன்று. ஆதலின் வகையினால் இரண்டுபோல் தென்படும் இம் மகிழ்ச்சிக்கு மூலகாரணமாயிருக்கும் மனோவிகாரம் ஒன்றே. இதனை எண்ணியக்கால் மனிதர் மகிழ்ச்சியெனப் பாராட்டும் செய்திகளிற் பல எத்துணைச் சிறுமைக்குச் சான்றுகளாகின்றன என்பதை ஒருவாறு ஓர்ந்து கொள்ளல் அருமையாகாது.

பொதுவாகப் புகலுமிடத்து "இது கண்டோம், இது கேட்டோம் இது உண்டோம், இது உடையேம், இது பெற்றேம்; இன்னார் தன்னை இது சொல்லிப் புகழ்ந்தனர், அன்னார் தன்னை அவ்வகைக் கொண்டாடினர்" என்றேனும், அல்லது தனக்கு நல்லதல்லா இது விது நேர்ந்திலது என்றேனும் நினைக்கின்ற சிந்தனையே மகிழ்ச்சி சுரக்கின்ற இடமாகின்றது. இருந்து மகிழ்விக்கும் விடயங்களெல்லாம் இல்லாக்கால் குறைகளாகத் துயர்செய்யும் கொள்கையன. ஆதலின் ஒருவன் மகிழ்கின்ற மகிழ்ச்சியின் தன்மையைக் கண்டு அவன் குறையென்று கொண்டிருந்தன எவையெவை யென்று கணித்தல் கூடும். ஒருவனது பெருமையையும் சிறுமையையும் அளப்பதற்கு அவன் குறையெனக் கொண்டிருந்தவைகளை விலக்கியபரிசினை ஓர்ந்து கொள்வதைவிடச் சிறந்த கருவி வேறிலதென் றுரைக்கலாம்.

எனின், மானுடப் பெருமையைக் குறிக்கும் மகிழ்ச்சி யாதென்றும், மற்று மானுடச் சிறுமையைக் குறிக்கும் மகிழ்ச்சி யாதென்றும் தெரிந்துகொள்ள வேண்டுவோர்,

> தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடைமை
> அம்மா பெரிதென் றகமகிழ்க—தம்மினுங்
> கற்றாரை நோக்கிக் கருத்தழிக கற்றதெல்லாம்
> எற்றே யிவர்க்குநா மென்று,

என்னுமவ் வுலகறி வெண்பாவைப் பன்முறை சிந்தித்து ஆராய்வதினின்று பேருதவி பெறுபவ ராவ ரென்பதிற் சந்தேகமில்லை. இச்செய்யுளில், நம்மை அகமகிழ அழைக்கின்றார் இக்கவி. மகிழ்ச்சிக்கு ஆதாரமாயிருக்கின்ற செய்தி ஒப்புமைநோக்குதல்

என்பதையும் முதலடி குறிக்கின்றது. மணிபணியாடைப் புனைகோலமுடையான் அஃதில்லாப் பிறரையும் நோக்கித் தன்னையும் நோக்கி "என்னே என்னழகு, என்னே என்னுடைமை, என்னே என் பெருமை" என அகநக மகிழ்வானொருவனை வைத்து முன்கூறிய உதாரணத்தையே இச்செய்யுளின் முதலிரண்டடிகள் உட்கொண்டிருக்கின்றனவென்று எண்ணவேண்டா. அதற்கும் இதற்கும் வேற்றுமை பெரிதுளது; அவ்வேற்றுமையை உணர்ந்தக்கால் யாம் இங்கு விளக்கமுயல்கின்ற விடயங்களின் பெரும்பகுதியைத் தெரிந்து கொண்டதாகும்.

இவ்வேற்றுமைதான் யாதென்று சுருங்கச்சொல்ல வேண்டுமாயின், இச் செய்யுளில் குறித்த மகிழ்ச்சி குறைபொன்றுங் கூராத்தன்மையால் விளைகின்ற மகிழ்ச்சியென்றும், யாம் காட்டிய உதாரணத்தில் குறித்தமகிழ்ச்சி குறைபொன்று நீங்கியதால் நேர்வதுபோல் தோன்றுகின்ற மகிழ்ச்சியென்றும் ஒருவாறு இங்கு வகுத்துக் காட்டலாம். முன்னது இருக்கும் நிலையைப்பற்றியது; பின்னது எய்திய நிலையைப் பற்றியது. குறைநீங்குவது மகிழ்ச்சிக்குக் காரணம் என்றுகொள்வோம். ஆனால், 'குறைநீங்கல்' என்னுமச் சொல் இருவேறு பொருளுடைத்து. ஒன்று குறையே நீங்குவது; மற்றது, குறைவுற்றிருந்த பொருள் கைகூட அதனால் அக்குறைநிறைந்து தீர்வது. இப்பின்னதெல்லாம், நிறைந்துதீர்வதுபோல் அவ்வப்போதினில் தோன்றுமொரு மாயத்தோற்றமேயல்லாது, உண்மையை உரைக்குங்கால் அதனினும் பெரிய வேறுசில குறைகளுக்கே வித்தாவது சிறிது முயன்று சோதிக்குங்கால் புலப்படும். இந்த இரகசியத்தையும் இதற்குரிய காரணத்தையும் இதன்முன் வேறோரிடத்தில் வரைந்திருக்கின்றோம். (3-வது வால்யூம்—222 வது பக்கம்)

ஆதலின், மெய்யறி புலவர்கள் நம்மைநோக்கி 'மகிழ்க' என்றுவிதிப்பரேல், குறைகளையேநீக்கிவிட்டு நிற்கின்ற நிலையினைத்தான் நினைத்துக் கூறுவரென்பது இதுவரை உரைத்தவைகளால் கொள்ளக்கிடக்கின்றது. குறைகளைப் போக்குவதனினும் நிறப்ப முயலுதல் எளியதாதலின் இப்பின்னதைச் செய்பவர் எளியவராகின்றனர். "உன்னையும் அவனையும் ஒப்பு நோக்கி அவன்பால் இல்லாதனகண்டு மகிழற்க, இருப்பன கண்டு அழியற்க, நின்பால் இருப்பதையே கொண்டு மகிழ்ந்திடுக" என அறிவுறுத்தும் இச்செய்யுளின் அருமையையுணர்ந்து அதன்படி அமைவதற்கு முன்னைப்பிறவியில் செய்தவங்கள் பல முயன்றிருக்க வேண்டும். தன்னின் மெலியானைநோக்கித் தனதுடைமை அம்மா பெரிதென்று அகமழ்வானொருவன் தன்னின் வலியாரைநோக்கிக் கருத்தழியக் காரணம் இன்மையால், எவர்க்குந் தான் தாழ்ந்தவன் என்ற எண்ணம் எய்தாது தானே தன்னுடைய பெருமைக்குச் சான்றாய் நிற்கின்றான். அப்படி நிற்கின்ற நிலையில் அகத்தினுள் திகழும் அமைதியே மகிழ்ச்சியெனுஞ் சொல்லால் இங்குக் குறிக்கப்படுகின்றது. தீமையினின்று புறப்பட்டு நன்மையின்பால் கொண்டு சேர்க்கின்ற வழியோ நெடியவழி. அவ்வழியில் நடக்கவும் நடத்தவும் விழைவார்க்குத் தோன்றாத்துணையாய் உடன்வந்து உதவவல்லது இத்தகை மகிழ்ச்சியேயாகும். இதனிற்றான் தாழ்மையென்பது சிறிதுமில்லை.

ஆனால், உலகவாழ்க்கையில் வைகியுளமக்கள் அடைதற் கவாவுற் றலைகின்ற மகிழ்ச்சியோ இது வன்று. "குறையொன்று நமக்குள தென்னும் கொள்கையை அறவேபோக்கி அகமகிழ்க" என்று பொதுஜன முன்னேற்ற முயற்சிகளில் ஈடுபட்டிருப்பவர்களில் எவரே நமக்கு இதுகாறும் உரைத்திருக்கின்றனர். "தம்மின் மெலியாரைநோக்கித் தமதுடைமை அம்மா பெரிதென் றகமகிழ்க" என்று தெய்வத்தமிழால் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்தார். தற்கால முன்னேற்ற முயற்சியாளரோ, "இங்கிலாந்தில் அமெரிக்காவில் ஜர்மனியில் ஆளொன்றிற்குத் தினப்படி வருவாய் அவ்வளவு அவ்வளவு, ஏழை இந்தியர்களே நுங்கள் வருவாயோ இவ்வளவு இவ்வளவே' என்று கணக்கறுத்துக் காட்டிக் காட்டித் தம் நொய்யமொழிகளால் கருத்தழியச்செய்கின்றனர். இவ்விருவர்களில், குமரகுருபர சுவாமிகள் அனைய விழுமியோர் சொற்களே ஏற்கத் தகுந்ததென வற்புறுத்தவேண்டிய நிலையும் இன்று வந்தெய்தியதெனின் கலிகால விபரீதங்களுக்கு வேறென்ன கரிவேண்டும்.

மற்றவரோடு தன்னை ஒப்புநோக்கிக் கொள்வான் ஒருவனைக் குறித்து நிறுவிய பொருளுரை அருமருந்தன்ன இச்செய்யுளின் முதலிரண்டடிகள். இதன்பின், தன்னையே தனிக்கருதி இயங்குவார் தம்மைக் கூவி அவர் இதயத்துள்ளூடுருவித் தைக்கவல்லவொரு சொல் மற்றைய இரண்டடிகளால் இயம்புகின்றார் நம் குமர குருபரர். "இருப்பது போதாமல் இன்னும் மிக்க உடைமைகள் எய்தவேண்டுமென்பது உங்கள் குறையாயின், அதனை முயன்றெய்தி மகிழ்வதற்கு யாது வழி என உழலாதீர். அக்குறையையே பிடர் பிடித்துந்திப் போக்குதலே பெரிதுத்தமமாகுங் கண்டீர்" எனச் சாற்றிய அப்பெரியார் "கல்வியின் திறத்தில் நின்னையே நோக்கிக்கொண்டு மகிழாது, யான் கற்றுள கல்வி போதாதென்னுங் குறைமிகக் கூர்ந்து அக்குறையை நிறப்ப முயல்வதே நன்று காண்" என உரப்ப விரைகின்றனர். "யானே கண்டு கருத்தழிதற் கொத்தகல்வியன் இனி எங்கும் இலனே போலும்" என்று எண்ணுதற் குரியநிலை கல்வியின் உயர்ச்சியால் மெய்யாக எய்துவதிவ்வுலகில் இயலாதாதலின் முடிவிலாமுயற்சிகள் சிலவற்றுள் இதுவே முதன்மையாகும். நாடியே பொருளைப் பெற்றுவிட்டதால் முயற்சியும் முற்றியது என்பதற்கில்லா இவ்வகையிற்றான் முயற்சியிலேயே மகிழ்ச்சி விளைவதற் கிடமுளது. ஆதலின், இதுவும், குறையையே நீக்கியவிடத்து விஞ்சுகின்ற அமைதியைப் போன்றதோர் நிலையேயாதலின் எய்திய பொருளால் மாறுபட்ட தன்மையைத் தோற்றுவிக்குந் திறத்த தன்றென்பது புலப்படும்.

இத்தகையன போன்ற ஒன்றிரண்டு வகைகளிலன்றி மாநுடர் தம் மற்றைய மகிழ்ச்சிகள் பற்பல விதங்களில் இழுக்குடையனவாகும். இன்னிசைக் கீதங்களைக் கேட்கும்போதும் இயற்கையமைப்பின் வனப்பினைக் காணும்போதும், நற்சுவை நூல்களை ஓதும்போதும் பண்பட்ட மனத்தினர்பால் பெருகுகின்ற உள்ளக்கிளர்ச்சியை மகிழ்ச்சியென்று மயங்க வேண்டா. "மக்களே போல்வர் கயவர் அவரன்ன, ஒப்பாரி யாங்கண்டதில்" எனவியக்குங் குறளே போல், வேறு வேறாயிருந்தும் ஒன்றேபோல் தோன்றுகின்ற விந்தை அம்மசிழ்ச்சிக்கும் இக்கிளர்ச்சிக்கும் இடையே உளது. உலகத்தினின்று தன்னை வேறு பிரித்துக் கொள்ளும்படி கரந்துறைந்து தூண்டுகின்றவோர் கருத்தினால் நிகழ்வது மகிழ்ச்சி எனின், உலகத்தோடு தன்னை முற்றிலுங்கலந்து கொள்ளும்படி தூண்டுகின்ற ஊக்கமே எழிலுடைப் பொருள்களாலும் அமைப்பினாலும் எழுதரும் நம் உள்ளக் கிளர்ச்சி. ஆதலின், சங்கீதம் சிற்பம் காவியம் அனைய கலைப் பொருள்கள்பற்றியும் இயற்கையின் தோற்றத்தைப்பற்றியும் எழுகின்ற உள்ளக்கிளர்ச்சியில் இகழ்தற்குரிய தன்மையாதுமில்லை.

அப்பர்

அப்பரும் அறுபத்துநான்கு கலைகளும்-ஸ்தம்பனக் கலைகள்.

17. ஜல ஸ்தம்பனம்.

[65-வது பக்கத் தொடர்ச்சி]

இதுகாறும் வைத்தியக் கலையின் நுட்பங்களை அப்பர் மிகவும் அறிந்தவரென அநுமானிக்கக்கூடிய தேவாரப் பாசுரங்களைக் கண்டோம். இனி முறையே ஸ்தம்பனக்கலைகள் பற்றி அப்பர் கண்டறிந்தன ஏதாகிலும் தேவாரத்திற் காணப்படின் அவற்றையும் சிறிது ஆராய்வோம்.

1. ஜல ஸ்தம்பனம்:—ஜலஸ்தம்பனமானது நீரோட்டத்தைத் தடுத்தலாம். நீருக்கு இருவகை ஓட்டங்கள் உள. அவையாவன:—உள்ளோட்டம், புறவோட்டம் என இருவகையாம். அருவியாகவும் ஓடைகளாகவும் நீர் பாய்வது புறவோட்டமாகும். உள்ளோட்டமாவது புறத்தில் ஓட்டமின்றி நிற்கும் நீரானது தனக்குள் ஓயாது சுற்றிக்கொண்டிருப்பது. இப் பண்பினால்தான் ஒரு பாத்திரத்திலுள்ள நீரில் சிறிது உப்பு இடுவோமாகில், அது இடும் இடமாத்திரமாயிராமல் நீர் முழுதும் கலக்கும். இப்பண்பைக் காற்றும் அனலும் விருத்தியாக்குமன்றி, அவற்றால் இக்குணம் நீரில் உற்பத்தியாகின்ற தென்பதற்கில்லை. எப்பொருள்களிலும் அணுக்கள் சுழல்வதுபோல் நீர் சுழல்வதால் அச் சுழலோட்டம் உப்புபோன்ற வஸ்துக்களை எங்கும் பரவச் செய்கின்றது. இவ்வாறு பரவவொட்டாது நீரைக்கட்டுவதே ஜலஸ்தம்பனக் கலை.

2. இக்கலையின் தோன்மை:—இக்கலை மிகவும் பூர்வீகமானது. குருக்ஷேத்திரத்தில் பாரதயுத்த முடிவில் சுயோதனன், இக்கலையால் இறந்தவர்களை எழுப்பமுயன்றா னென்பது பாரதத்தில் காணலாகும். சிவபெருமானும் ஆகாயகங்கையைத் தனது சடையில் "உறைதர" நிறுத்திவைத்த பெருமை ஆங்காங்குத் தேவாரத்திற் காணலாம்.

பிறைதரு சடையின்மேலே பெய்புனற் கங்கைதன்னை
உறைதர வைத்தவெங்க ளுத்தம னூழியாய
கிறைதரு பொழில்கள்சூழ நின்றநெய்த் தானமென்று
குறைதரு மடிய வர்க்குக் குழகனைக் கூடலாமே.

திருநெய்த்தானம் திருநேரிசை 3.

எனவே ஜலஸ்தம்பனமாவது நீரோட்டத்தைமந்திர பலங்கொண்ட மனோசக்தியால் அடக்கி அதன் மூலமாய் இம்மையிற் கைவல்யமாகக்கூடிய பெருஞ் சித்திகளைப் பெறுங்கலையாம். ஆயினும் மறுமையையும்பேரின்பத்தையும் கருதாது இக்கலையில் பழகுவது சிறப்பன்று என்பதே ஆன்றோர் துணிபு. இதை அப்பர் மூன்று பாசுரங்களில் மிகவும் அழகாய் எடுத்துக் காட்டுவதை நோக்குக:—

பொருத்திய குரம்பை தன்னைப்
　　பொருளெனக் கருத வேண்டா
இருத்தியெப் பொழுது நெஞ்சு
　　ளிறைவனை யேத்து மின்னோ!
ஒருத்தியைப் பாகம் வைத்தங்
　　கொருத்தியைச் சடையுள் வைத்த
துருத்தியஞ் சுடரி னானைத்
　　தொண்டனேன் கண்ட வாறே.

சவைதனைச் செய்து வாழ்வான்
　　சலத்துளே யழுந்து கின்ற
இவையொரு பொருளு மல்ல
　　இறைவனை யேத்து மின்னோ!
அவைபுர மூன்று மெய்து
　　மடியவர்க் கருளிச் செய்த
சுவையினைத் துருத்தி யானைத்
　　தொண்டனேன் கண்ட வாறே!

உன்னியெப் போது நெஞ்சு
　　ளொருவனை யேத்து மின்னோ!
கன்னியை யொருபால் வைத்துக்
　　கங்கையைச் சடையுள் வைத்துப்
பொன்னியி னடுவு தன்னுட்
　　பூம்புனல் பொலிந்து தோன்றும்
துன்னிய துருத்தி யானைத்
　　தொண்டனேன் கண்ட வாறே!

திருத்துருத்தி - திருநேரிசை 1, 2, 3

திருநாவுக்கரசுநாயனார் பாடிய திருத்துருத்திப் பதிகத்திலுள்ள சொற்றொடர்களைச் சற்றுக்கவனிப்போமாயின் மறுமைப்பயன் கருதாதும் இறைவனையேத்தாதும் ஜலஸ்தம்பனத்தைப் பல புறச்சமயிகள் கற்கின்றனர் என்பதை இப் பாசுரங்கள் விளக்குவது போல் தோற்றுகின்றது. இக்கலையில் வல்லவரான சமண புத்த மதத்தினர்களைப்பற்றி அப்பர் கூறுவது காண்க.

குண்டரே சமணர்புத்தர்
　　குறியறி யாதுநின்று
கண்டதே கருதுவார்கள்!
　　கருத்தெண்ணு தொழிமினீர்கள்
விண்டவர் புரங்களெய்து
　　விண்ணவர்க் கருள்கள்செய்த
தொண்டர்க டொண்டனைத்
　　துருத்திநான் கண்டவாறே!

திருத்துருத்தி-திருநேரிசை 9.

வெற்றுரையாகும் யாதோ ஒரு மந்திரத்தால் சற்று மனம் சலனமற்று நிற்க எதிர்பாராத தொழில்களைச் செய்யும்சக்திகள் ஏற்படினும் அவை சாச்வதநிலையாய் நின்று பயன்தராவாகையால் சிவபெருமானை முன்னிலைப்படுத்தி இக்கலைபயின்றால் வள்ளலாகிய முழுமுதற் பெருமான் எவ்வித இடையூற்றையும் கடக்கும்படி உதவிபுரிவானென்பது அப்பர் சித்தாந்தமாகும்.

அள்ளலைக் கடக்கவேண்டி லரனையே நினைமினீர்கள்
பொள்ளலிக் காயந்தன் னுட் புண்டரீ கத்திருந்த
வள்ளலை வானவர்க்குங் காண்பரி தாகிநின்ற [வாறே
துள்ளலைத் துருதியானைத் தொண்டனேன் கண்ட

திருத்துருத்தி-திருநேரிசை 6.

பஞ்சாட்சர உதவியால் சிவத்தியானஞ் செய்து இக்கலையை வளர்ப்பதைவிட்டு ஏதோ வீண் மந்திரம் ஜெபிப்பதைச் சுந்தரர் இழித்துக்கூறுவது காண்க:—

நமணநந்தியுங் கருமவீரனுந்
தருமசேனனு மென்றிவர்
குமணமா மலைக்குன்று போல்நின்று
தங்கள் கூறையொன் றின்றியே
ஞமண ஞாஞண ஞாணஞோணமேன்
றோதி யாரையு நாணிலா
அமண ராற்பழிப் புடைய ரோநமக்
கடிக ளாகிய வடிகளே!

இவ்வாறு "ஞமண ஞாஞண ஞாணஞோணம்" என்னும் மூக்கினுன் முரன்றோது மந்திரங்களைப் பேணுது "சிவாய நம"வெனச் சிந்தித்து எக்கலையிற் பிரவேசிப்பினும் அது சித்தியாவதுடன் நிலைத்துநின்றும் பயன்தருமென்பதற்கு ஐயுறவில்லை. நமதுவாழ்நாளோ சலம்போன்ற திள்ரகள்பொருந்திப் பற்பலவகைச் சலனம் பெற்றது. அதைத் தெளிவிப்பதற்குச் சிவபெருமானுன நீர்த்திரள்களைக் கடை பிடித்தல் இன்றியமையாததாம்.

முன்னுனைத் தோல்போர்த்த மூர்த்தி தன்னை
மூவாத சிந்தையே மனமே வாக்கே
தன்னுனை யாப்பண்ணி யேறி னுனைச்
சார்தற் கரியானைத் தாதை தன்னை
யென்னுனைக் கன்றினை யென்னீசன் றன்னை
பெறிநீர்த் திரையுகளுங் காவி ரிசூழ்
தென்னுனைக் காவானைத் தேனைப் பாலைச்
செழுநீர்த் திரளைச்சென் றாடி னேனே.

திருவானைக்கா - திருத்தாண்டகம் 1

சிவபெருமான் என்னும் சலத்திரளைக் கொண்டு நமது வாழ்க்கையான சலவோட்டத்தைச்சற்று ஸ்தம்பிக்கச்செய்து தமது இம்மை மறுமைக் காரியங்களை முடிப்பது அறிஞர் கடனும்:—

உடறனைக் கழிக்க லுற்ற வுலகத்து ளுயிர்கட்கெல்லாம்
இடர்தனைக் கழிக்கவேண்டி லிறைவனை யேத்து [மின்னோ
கடறனி னஞ்ச முண்டு காண்பரி தாகி நின்ற [வாறே
சுடர்தனைத் துருத்தி யானைத் தொண்டனேன் கண்ட
திருத்துருத்தி திருநேரிசை 5.

சாமனை வாழ்க்கையான சலத்துளே யழுந்தவேண்டா
தூமலர்கொணுங்காட்டித் தொழுதடிவணங்கு மின்னோ
சோமனைச் சடையுள்வைத்துத் தொன்னெறி பலவுங் [காட்டும்
தூமனத்துருத்தியானைத்தொண் டனேன்கண்டவாறே
ஷ 8,

என்றும் பகர்வதும் காண்க.

இக்கலையில் அப்பர் திறம்:— திருநாவுக்கரசு நாயனுர் சலஸ்தம்பனக் கலையை யறியாது யாதோ ஒருபோக்காய்ப் பழித்தாரென நாம் எண்ணலாகாது. "கற்றுணைப் பூட்டிக் கடலிற் பாய்ச்ச" அக் கல்லின்மேல் மிதந்து திருப்பாதிரிப்புலியூருக்குச் சென்றுர் என்னும் அவரது சரித்திரத்தை உற்றுநோக்குவோமாயின், பஞ்சாட்சரத்தை அடிப்படையாகப் பெற்ற அம்மந்திர பலத்தால் சலஸ்தம்பனம் செய்து உறைந்தநீர் கல்லினும்கனக்க, சல்மேலெழுந்து ஒரு படகுபோல் சமுத்திரத்திற் சென்றதென்றும் நாம் அனுமானிக்கலாம். இவ்வாறு சலஸ்தம்பனம் செய்து நடந்த பெரியோர் பலர் புறச்சமயங்களிலும் உளர். இயேசுநாதர் போன்ற யோகிகள் நீர்மேல் நடந்தாரென்பது சலஸ்தம்பனமே. நமது சமயத்திலும் திருஞானசம்பந்தர் கொள்ளம்பூதூர் என்னும் திருப்பதிக்கருகே முள்ளிவாய்க்கரையைத் திருக்கூட்டத்தோடு அணைந்தபோது, அங்கே ஆறு மிகப் பெருகுதலால் நீர்வாணர் ஓடத்தை ஓடக்கோல் நிலையில்லாமைபற்றிக் கரையிலே நிறுத்திவிட்டுப் போய்விட்டார்களென்றும், பிள்ளையார் அதுகண்டு எதிரே தோன்றும் கொள்ளம்பூதூர் சுவாமி தரிசனம் செய்ய விரும்பி ஓடத்தை யவிழ்த்துக்"கொட்டமேகமழும்" என்னும் பதிகம் பாட ஓடம் சென்றதும் ஜலஸ்தம்பனச் செய்கையன்றோ ?

அவ்வாறு திருநாவுக்கரசு நாயனுரும் சமணரால் கல்லிற் கட்டப்பட்டுக் கடலிற்பாய்ச்சப்பட்டபின்னர் ஜலஸ்தம்பனமாகச் சிவன்திருநாமம் பகர்ந்து அக் கல்லையே படகாக்கி உய்ந்தவிஷயம் அவர் தேவாரத்திலுள்ள அகச்சான்றுகளாலும் விளங்கும்.

கல்லி னோடெனைப் பூட்டி யமண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினுல்
நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
நல்லநாம நவிற்றி யுய்ந்தே னன்றே?

திருநீலக்குடி - திருக்குறுந்தொகை 7.

எனவே ஜலஸ்தம்பன மென்னும் கலையை அப்பர் மதியாதிருந்தும்அக்கலையிலிவர்மிகவும் திறமைபெற்றவர் என்பதற்கு யாதொரு சந்தேகமுமில்லை. அஞ்செழுத்தாலே இக்கலை "நிற்பதிலும்" "நடப்பதிலும்" சிறக்குமென்பது உணர்த்துவதுபோல் காணப்படும் அவர் பாசுரமொன்றைக் காண்க:—

துறந்தானை யறம்புரியாத் துரிசர் தம்மைத்
தோத்திரங்கள் பலசொல்லி வானோ ரேத்த
நிறைந்தானை நீர்நிலந்தீ வெளிகாற் றாகி
நிற்பனவும் நடப்பனவு மாயி னானை
மறந்தானைத் தன்னினையா வஞ்சர் தம்மை
யஞ்செழுத்தும் வாய்நவில வல்லோர்க்கென் [றும்
சிறந்தானைத் திருநாகேச் சரத்து ளானைச்
சேராதார் நன்னெறிகட் சேரா தாரே.

திருநாகேச்சரம்- திருத்தாண்டகம் 6.

இக்கருத்தையே திநாவுக்கரசர் மற்றோரிடத்தில் தெரிவிக்கின்றார்:—

மண்ணிலங்கு நீரனல்கால் வானு மாகி
மற்றவற்றின் குணமெலா மாய்நின் றாரும்
பண்ணிலங்கு பாடலோ டாட லாரும்
பருப்பதமும் பாசூரு மன்னி னாரும்
கண்ணிலங்கு நுதலாருங் கபால மேந்திக்
கடைதோறும் பலிகொள்ளும் காட்சி யாரும்
விண்ணிலங்கு வெண்மதியக் கண்ணி யாரும்
வெண்ணியமர்ந் துறைகின்ற விகிர்த னாரே.

திருவெண்ணியூர் - திருத்தாண்டகம் 5.

மானத சாத்திரம்

[PSYCHOLOGY]

[71-வது பக்கத் தொடர்ச்சி]

(புலன்கள் - Perception)

கண்.

வெளிறுகள்:—(Grays) செம்மை முதலிய நிறங்களைக்காட்டாது, மங்கல் ஒளியாய் விளங்கும் வெளிற்றொளிகளை, வெளுப்பிலிருந்து கறுப்புவரை கோவைப் படுத்தலாம். ஏதேனும் ஒரு மங்கல்ஒளியைக் குறித்தெடுத்து, அதனோடு சிறிது சிறிதாக வெண்மையை ஒரு புறமும் கறுப்பினை மற்றொரு புறமும் கலந்து கொண்டே போனால், பலவகையான வெளிற்றொளிகளைக் காண்கின்றோம். ஏறக்குறைய 700 வகையான வெளிற்றொளி வகையை நமது கண் வேறுபிரித் தறிகின்றது. வெளிச்சம் அல்லது விளக்கத்தின் வேறுபாடே இவ்வெளிற்றொளிகளின் வேறுபாடாகும். எனினும், புலத்தன்மை வேறுபாடும் அங்குக் காணப்படுகின்றது. அடுத்தடுத்துள்ள இரண்டு வெளிற்றொளிகளின் புலத்தன்மை வேறுபாட்டை அறிவது அருமை. ஆனால் வெளுப்பையும் கறுப்பையும் வைத்து நோக்கும்போது அவ்வேற்றுமை இனிது புலனாகவில்லையா? அவ்வேற்றுமை வெளிச்சத்தாலும் வெளிச்ச மின்மையாலும் மட்டுமா எழுகின்றது! நிற வேறுபாடுபோல இவ்வேறுபாடும் புலத்தன்மை வேறுபாடல்லவா? கறுப்பினிடையேயுள்ள வெளுப்பினைச் சிறிதுபோது, ஊன்றிப் பார்த்துவிட்டுக் கண்ணை மூடிக்கொள்வோமானால், கறுப்பிருந்த இடத்தில் வெளுப்பும் வெளுப்பிருந்த இடத்தில் கறுப்பும் காண்போம். நிறங்களை இவ்வாறு பார்க்கும்போதும், இவ்வாறு மாறிக் காண்கிறோம். ஆகவே வெளுப்பும் கறுப்பும் கட்புலத் தன்மைகளேயாம் (Visual Qualities). கறுப்பென்பது ஒளித்தாக்கலால் எழுவதொன்றன்று. ஆகையால், அதனைக் கட்புலத்தன்மை என விளக்கிவைப்பது அருமையாகின்றது. அருகில் உள்ள இடம் வெளுத்திருத்தலால் கறுப்புப்புலன் எழுகின்றதுபோலும்.

ஒளிறுகள்:—(ரங்கு) பலவகையான வெளிற்றொளிகளை நிறவொளிகளோடுகலந்தால் பலவகையானஒளிற்றொளிகளைக் காண்கின்றோம். செம்மையோடு வெளுப்பைக் கூட்டினால் செந்தாமரை நிறத்தைக் காண்போம். செம்மையுடன்கறுப்பைக்கூட்டினால் குருதிநிறத்தைக் காண்போம். இவ்வாறு ஒவ்வொருநிறத்திலும் பலவிதமானவேறுபாடுகளைக் காட்டலாம். அன்றியும் ஒரேபளபளப்புள்ள நிறத்தையும் வெளிற்றையும் ஒன்றுகூட்டினால், அங்கே ஒரு வேறுபாடு தோன்றுகின்றது. பல குடங்களிலே ஒரேஅளவாகத் தண்ணீரை ஊற்றி வைத்து ஒவ்வொன்றிலும் வெவ்வேறு அளவாக உப்பைக் கரைக்கின்றேன். இத்தண்ணீரின் வேற்றுமை என்ன? ஒரு குடத்தில் இருக்கும் தண்ணீரில் உப்பு நிறைந்துள்ளது; மற்றொரு குடத்தில் உப்புக் குறைந்துள்ளது. உப்பின் நிறைவும் குறைவுமே வேற்றுமையாதல் போல், ஒரே பளபளப்புள்ள வெளிற்றொளியும் நிறவொளியும் வெவ்வேறு வகையாகக் கலக்கும்போது, அங்கே தோன்றும் வேற்றுமையும் நிறத்தின் நிறைவும் குறவுமேயாம். (Saturation)

பற்கிஞ்சித் தோற்றம்:—பொதுவாக மஞ்சள் நிறமானது பளபளப்பாகத் தோன்றுகின்றது. வெளிச்சத்தை மிகுதிப்படுத்தினால், செம்மையும் மஞ்சளும் மற்றையநிறங்களைவிடப் பளபளப்பாகத்தோன்றுகின்றன. வெளிச்சம் குறையுமானால், செம்மை முதலிய பேரலை ஒளிகள், கருமை முதலிய சிற்றலை ஒளிகளை விட விரைவில்இருளடைகின்றன. வெளிச்சம் மிகுந்தபோது பளபளப்பாகத் தோன்றிய செம்மை, குறைவான வெளிச்சத்தில் இருளடைகின்றது. வெளிச்சம் மிகுந்தபோது பளபளப்பு மிகாதிருந்த கருமை, வெளிச்சம் குறைந்தபோது, செம்மையை விடப் பளபளப்பாகத் தோன்றுகின்றது. நிறங்களின் விளக்க வேறுபாட்டு நிலையைப் பற்கிஞ்சி என்பவர் முதன் முதலாகக் கண்டுபிடித்தாராதலின், இதனைப் பற்கிஞ்சித் தோற்றமென்றே வழங்கலாயினர். நமது கண், வெளிச்சநிலைக்குத் தக்கவாறுபொருத்தமுறுகின்றதன்றோ? அப்பொருத்தமுறுதலின்(Adaptation) பயனே இவ்வேறுபாடு. பாவைத்தசை மடக்கைப் பற்றி முன்னரே கூறினோம் அன்றோ? பாவை குவிவதையும் மலர்வதையும் கண்டோம். இத் தசைஇயக்கத்தோடு, புலப்படாத்தில் ஒரு மாறுபாடும் வெளிச்சநிலைக் கேற்றவாறு எழுகின்றதாம். கண் செச்சை (Visual Purple) என்று ஒரு பொருள் இருக்கின்றதாம்; அப்பொருள் ஒளி நிலையால் மாறுதல் அடைந்து, நிறத்தில் சிறிதளவு வேற்றுமையையும் பளபளப்பின் மிகுதியையும் உண்டு பண்ணுகிறதாம்.

துணை நிறங்கள்:—(Complimentaries) கறுப்பும்வெளுப்பும் துணைநிறமாதலைமுன்னரேகண்டோம். ஒரு வட்டத்தில் மஞ்சள்நிறத்தையும் கருமை நிறத்தையும் செம்பாதியாகப் பூசிச் சுற்றினோமானால், ஒரு நிறமும் தோன்றுவதில்லை. மங்கலான வெளுப்பாகத் தோன்றுகின்றது. ஒவ்வொரு நிறத்திற்கும் ஏற்றவொரு துணைநிறத்தை அதனோடு பொறுத்தி இவ்வாறு சுழற்றினால் ஒரு நிறமும் தோன்றாமல், மங்கலான வெளுப்புநிறம் எழுவதற்குத் துணையாய் இருத்தலின் அவற்றைத் துணை நிறங்கள் என வழங்குகின்றோம்.

பின்னிலைப் புலன்:—(After sensation) பளபளப்பான ஒரு நிறத்தைப் பார்த்துக்கொண்டே இருந்து பின் வெளிற்றிடமொன்றைப் பார்ப்போமானால், நாம் கண்டுகொண்டிருந்த நிறத்தின் துணை நிறம் தோன்றுகின்றது. கருமைநிற (Blue) வட்டம் ஒன்றை உற்று நோக்குகின்றேன். பின் வெளிற்றிடத்தை நோக்கினால், சிறிது கருமை நிழலோடு கூடிய மஞ்சள் வட்டம் தோன்றுகின்றது. நமது கட்புலப்படாம் உற்றுநோக்கிக் களைத்துப்போனபோது இந்தத் துணைக்காட்சி எழுவதாகும். பழக்கத்தால் துணைநிறக் காட்சியை வளர்க்கலாம். பயிற்சி பெற்றவன், கருநிறத்தை உற்று நோக்கியபின், மற்றொரு புறம் திரும்புவானானால், ஓரிமைப்போதுவரை அக்கரு

நிறமே முதலில் தோன்றும்; பின்னர் மஞ்சள் ஆகிய துணை நிறம் தோன்றும். கருமைநிறம் தோன்றுவதை உடன்பாட்டுப் பின்னிலைப்புலன் என்றும்; துணைநிறம் தோன்றுவதை எதிர்மறைப் பின்னிலைப்புலன்என்றும் (Positive after-sensation and Negative after-sensation) வழங்குவோமாக. நன்றாகப் பார்க்கப் பழகியவர்களுக்குப் பின்னிலைப்புலன் பல இமைப்போதுவரை உண்டாகும். எதிர்மறைப் பின்னிலைப்புலன் தோன்றியபின் அது மறைந்து மறுபடியும் உடன்பாட்டுப் பின்னிலைப்புலனும் தோன்றும். இவ்வாறு மாறிமாறிக் காணப் பழகியவர்களும் உள்ளார்கள்.

உடனிலை முரண் நிறம்:—(Contrast) கண்ணை அப்புறத்தே திருப்பாமல் இருக்கும்போதே, துணை நிறம் தோன்றக் காண்கின்றோம். கருமை பூசிய தட்டில்இடையே ஒரு வட்டம் கறுப்பும் வெளுப்புமாக வரைந்து அத்தட்டைச் சுற்றுவோமானால் கறுப்பும் வெளுப்பும் இயைந்து வெளிறு படுவதில்லை; கருமையின் (நீலம்) துணை நிறமாகிய மஞ்சள் நிறமாகத் தோன்றுகின்றது. ஈதே உடனிலை முரண் நிறமாகும்.

கண்விளிம்புக் காட்சி:—(Peripheral Vision) காணப்படும் பொருள் நேரே கண்ணின் நடுவிடத்தில் விழுந்தால்தான், பலநிறங்களையும் பிரித்தறிகின்றோம். நடுவிடத்திலன்றி ஓரத்தில் விழுமானால், பலநிறங்கள் தோன்றுவதில்லை. விளிம்பருகே வரவர, நிறத்தோற்றம் குறைகின்றது; தோன்றும் நிறமும், நிறைவுநிறமாகாமல் குறைவுநிறமாகிறது. விளிம்பிலே, வெளிறுதான் காண்கிறோம். நிறத்தைக் காண்பதில்லை. குமிழ்கள் (Cones) நடுவிடத்தே நெருங்கி இருக்கின்றன விளிம்பிற்கருகுவருகையில் சிறிதுசிறிதாகக் குறைந்து கொண்டேவந்து கடைசியில் ஒன்றும்இல்லாமற்போய் விடுகின்றன. கோல்கள் (Rods)விளிம்பருகே மொய்த்துக்கொண்டிருக்கின்றன; நடுவிடத்திற்காகப் போகப் போகக்குறைந்துகொண்டேபோய் நடுவிடத்தில்இல்லாமற்போய்விடுகின்றன. இவ்வாறமைந்திருப்பதை நோக்கி, குமிழ்களே நிறத்தால் தாக்கப் பெறுவன என்றும்; கோல்களே வெளிற்றொளியால் தாக்கப்பெறுவன என்றும் சிலர் முடிவுக்கட்டி யுள்ளார்கள். நிறங்கள் பல வேறுபா டடைவதுபோலக் குமிழ்களும் பலவாக வேறுபட்டு விளங்குகின்றன. பகற்காட்சி குமிழ்களால் நேர்கின்றதென்றும் ஒளிகுறைந்த மாலைக்காட்சி கோல்களால் நேர்கின்றதென்றும் வேறுசிலர் எடுத்துக் காட்டுகின்றனர்.

நிறக்குருடு:—நன்றாக உலகத்தை கண்டுவருபவர்களில் சிலர், நிறங்களை வேறு பிரித்தறிவதில்லை. அவர்களுக்குப் பச்சையும் செம்மையும் ஒன்றாகவே தோன்றும். அத்தகையோரைநிறக்குருடர்கள் எனலாம். நூற்றுக்குநால்வர் உலகத்திலே நிறக்குருடர்களாக வாழ்கின்றனர். முழுநிறக்குருடர்களும் உள்ளனர். அவர்கள் நிறத்தையே அறியார். உலகம்முழுதும் ஒரு நிழலோவியம் போல வெளிறாகத்தோன்றும். சிறிது நிறக்குருடையோரில் மூன்றுவகையினரைக்காணலாம். செங்குருடன் பைங்குருடன் கருங்குருடன் எனக் குறை நிறக் குருடர் மூவகைப்படுவர். செங்குருடாய் இருப்போன் செம்மை நிறத்தை வேறுபிரித்தறியான், பைங்குருடன் பச்சை நிறத்தை வேறுபிரித்தறியான். செங்குருடராய் இருப்போர் பலர், பைங்குருடராகவும் இருக்கின்றனர். இலைக்கும் பூவுக்கும் உள்ள நிறவேற்றுமையை அவர்கள் அறியார். செங்குருடர் செம்மையை அறிவதில்லை; பைங்குருடர்; செம்மையையும் பச்சையையும் மஞ்சளாகக் காண்கின்றனர். செங்குருடனுக்கோ ஒளிவில்லில் (Spectrum) மஞ்சளும் புகரும் கருமையும் மட்டும் விளங்குகின்றன. பைங்குருடனுக்கோ மஞ்சளும் புகரும் கருமையும் மட்டும் விளங்குகின்றன. கருமையையும் (நீலம்) மஞ்சளையும் வேறு பிரித்தறிய மாட்டாதவனே கருங்குருடன். அவனுக்கு ஒளிவில்லில் செம்மையும் புகரும் பச்சையும் தோன்றுகின்றன. நோயாளரிடையே இக்கருங்குருட்டு நிலையைக் காண்கிறோம்.

யாப்பிலக்கணம்

அசை

[49-வது பக்கத்தொடர்ச்சி]

பாட்டு அடிகளால் ஆவது ; அவ்வடியும் சீர்களால் ஆவது ; அவ்வசையும் எழுத்துக்களால் ஆவது. எழுத்துக்கள் தத்தம் மாத்திரைபற்றி அசைகளாய் அமைகின்றன.

சீர்களுக்கு ஆதாரமாகின்ற அசைகள், நேர் அசை' நிரை அசை, என இருவகைப்படும்.

ஒரு குறில் அல்லது ஒரு நெடில் தனித்தேனும் அல்லது மெய்யெழுத்தை அடுத்தேனும் நடைபெறுமாயின் அது நேரசை யாகும்.

இரண்டு குறில்கள், அல்லது ஒரு குறிலும் அதன்பின் ஒரு நெடிலும் ஆகித் தனித்தேனும் அல்லது மெய்யெழுத்தை அடுத்தேனும் நடைபெறுமாயின் அது நிரையசை யாகும்.

சீர்களுக்குள்ளேயே அசைகளின் தன்மையைக் காணக்கூடுமாதலின் இப்பொழுது, ஒரு செய்யுளை எடுத்துக்கொண்டு அதனில் உள்ள சீர்கள் எவ்வகை அசைகளால் ஆயிருக்கின்றன என்பதைப் பார்ப்போம்.

கொந்தார்குழல்சரியக்கோலமுகம்வியர்ப்பச்
சந்தார்திதலைத்தனமசையப்பந்தேநீ
சிற்றிடையாளார்வமொடுதீண்டிவிளையாட
நற்றவமென்செய்தாய்நவில்.

[பந்து விளையாடிக்கொண்டிருந்த ஒருத்தியைக் கண்டு காதல் கொண்ட ஒருவன் கூறுகின்ற மொழிகளாய் அமைந்திருக்கின்றது இச்செய்யுள்:—''பந்தே, பூங்கொத்துக்கள் குடியிருக்கின்ற கூந்தல் சரியவும், அழகிய முகம் வியர்க்கவும், சந்தனம் பூசிய சுணங்குடைய முலைகள் அசையவும், இந்தச் சிறிய இடையை உடைய மாது ஆசையோடு உன்

னைத் தீண்டி விளையாட, நீ என்ன நற்றவங்கள் செய்திருக்கின்றாயோ, சொல்'' என்பது இச்செய்யுளின் பொருள்.]

இந்தச் செய்யுளை இங்குச் சீர்பிரிக்காமல் எழுதியிருக்கின்றோம்; இனி ஒவ்வொரு அடியையும் சீர்களாகப் பிரித்துக்கொண்ட பின்னரே ஒவ்வொரு சீரும் எவ்வெவ்வகை அசைகளால் ஆயிருக்கின்ற தென்பதை அறிந்துகொள்ளல் கூடும். ஆயின், இதனைச் சீர்பிரிப்பது எப்படி என்னும் ஐயம் எழும். இது வெண்பா என்பதும், ஆகையால் முதல் மூன்று அடிகள் ஒவ்வொன்றிலும் நான்கு சீர்களும் கடைசியடியில் மூன்று சீர்களும் இருக்கவேண்டு மென்பதும், அச்சீர்களும் இயற்சீர் அல்லது வெண்சீர்களாயிருந்து வெண்டளை பிறழாமல் வரவேண்டு மென்பதும், ஈற்றடியின் ஈற்றுச் சீர் ஓரசைச்சீரா யிருத்தலுங் கூடுமென்பதும் யாப்பிலக்கணம் கற்றுத் தெரிந்துகொண்டபின்ன ரன்றோ இவ்விலக்கணங்களுக்கு இணங்கச் சீர்கள் பிரித்துக்கொள்ளக் கூடும்; அப்படியிருக்க இப்பொழுது முதலிலேயே இச்செய்யுளுக்கு எப்படிச் சீர்பிரித்து வைப்பது என்று சிலர் எண்ணலாம்; இது உண்மையே. ஆயினும், இலக்கணவிதிகளைத் தேடிக் கற்குமுன் காதையும் மனதையுஞ் செலுத்திச் சிறிது சீர்பிரித்துப் பயில முயல்வதுந்தக்கதே. இதற்கு உயர்தரப் புலவர்களின் செய்யுள்களையே எடுத்துப் பயிலவேண்டும்.

அவ்வாறு பயிலும்போது, ஓசைநயத்தையும் பொருள் அமைப்பையும் தொடர்ந்து சீர்கள் பிரிவது புலப்படும். இந்தச் செய்யுளைச் சீர்பிரித்துப் பார்ப்போம்:—

> கொந்தார் குழல்சரியக் கோல முகம்வியர்ப்பச்
> சந்தார் திதலைத் தனமசையப்—பந்தேநீ
> சிற்றிடையா ளார்வமொடு தீண்டி விளையாட
> நற்றவமென் செய்தாய் நவில்.

இதனில் ஒவ்வொரு சீரும் பெரும்பான்மை மொழியின் முடிவாக நிற்பதோடு அம்மொழியால் குறிக்கப்படும் பொருளும் முடிவதாய் அமைந்திருக்கக் காணலாம். இச்செய்யுள் முதலடியில், கொந்தார் என்பது முதற்சீர். (கொந்து ஆர் - பூங்கொத்துக்கள் பொருந்திய என்பது இதன் பொருள்) சொல்லும் பொருளும் அந்தச் சீரோடு ஒருவகையில் முடிவது காண்க. 'குழல்சரிய' என்பது இரண்டாவது சீர். இந்தச் சீரிலும் சொல்லும் கருத்தும் ஒருவகையில் முடிவடைவதைக் காண்க. "கோல" (அழகிய) என்னும் மூன்றும் சீரும் அவ்வாறே; ''முகம் வியர்ப்ப' என்பது நான்காம் சீர். அதனினும் சொல்லும் பொருளும் முடிவடைந்திருக்கின்றன. இப்படிச் சீர்பிரித்துச் சொன்னால் இச்செய்யுளடியின் ஓசையும் இனிமையாக இசைப்பதையும் ஒருமுறைக்குப் பன்முறை சொல்லிச்சொல்லிப் பார்த்துத் தெளிந்துகொள்ளலாம். இனி, மூன்றும் நான்காம் சீர்களைக் "கோல முகம்வியர்ப்ப" என்று பிரிப்பதற்குப் பதிலாய்க் "கோலமுகம் வியர்ப்ப" என்று பிரித்தால் பொருள்முடிகின்ற வரையில் இடரின்றித் தோன்றினும் ஓசையில் இடர்படுவதைப் பழக்கம் சிறிதுடைய செவி உணர்ந்துகொள்ளும்.

கொந்தார் குழல்சரியக் கோல முகம் வியர்ப்ப என்று சீர் பிரித்தும்,

கொந்தார் குழல் சரியக் கோலமுகம் வியர்ப்ப என்று சீர்பிரித்தும், அவ்வடியை அடுத்தடுத்துப் பல தரம் சொல்லிப் பார்த்துக்கொள்ளுங்கள். அப்பொழுது முன்னதன் ஓசைப் பின்னதைக் காட்டிலும் சற்று இனிமையாயிருப்பது புலப்படும். 'கோல முகம் வியர்ப்ப' எனப் பிரிவதால் ஓசை கெடுவதுமன்றி இலக்கணப் பிழையுமாவது பின்னர்த் தெரியும்.

இப்படியே இரண்டாவது அடியிலும், 'சந்தார் திதலைத் தனமசையப் பந்தேநீ' என்னும் நான்கு சீர்களும், தனித்தனிப் பொருள்முடிந்த சொற்களாய் நிற்பதுடன் இனிய ஓசையும் கொண்டு நடப்பதைத் தெரிந்துகொள்ளலாம். இவ்வாறின்றி, "சந்தார்தி தலைத்தன மசையப்பந் தேநீ" எனப்பிரித்தால் சொற்களும் ஓசையும் சிதைவுற்றடைகின்ற கேட்டைக் கண்டுகொள்க—அது இலக்கணப் பிழையுமாகும்.

மூன்றாவதடியிலுள்ள நான்கு சீர்களும் பொருளும் ஓசையுங் கெடாமல் பிரிந்திருக்கின்றன. நான்காம் அடியில், "நற்றவமென் செய்தாய் நவில்" என்னும் இம்மூன்று சீர்களும் அவ்வாறே. "நற்றவ மென் செய்தாய் நவில்'' எனப் பிரித்தால் சொற்கள் சிதைவில்லையாயினும், "நற்றவமென் செய்தாய் நவில்" எனப் பிரிந்திசைப்பதைக் காட்டிலும் ஓசைநயம் குறைந்திருப்பதை உணர்க. ''நற்றவ மென்செய்தாய் நவில்'' எனப் பிரிவது இலக்கணப் பிழை.

இப்படியே இன்னும் இரண்டொரு செய்யுள்களை வரைந்து, சொல்லமைப்பையும் ஓசைநயத்தையுங் கொண்டு சீர்பிரித்துப் பார்ப்போம். எழுத்துக்கள் அசைகளாவதைச் சீர்களிற்குள் சோதித்தறியவேண்டுமே யல்லாது தனிச்சொற்களை உதாரணங்களாய்க் கொண்டு பயிலப்புகுதல் தகுதியன்று. ஆதலாற்றான் செய்யுள்களில் சீர்கள் அமைகின்ற தன்மையை ஒரு சிறிது இப்பொழுதே காட்ட முயல்கின்றோம்:—

> ஓங்கலிடைவந்துயர்ந்தோர்தொழவிளங்கி
> ஏங்கொலிநீர்ஞாலத்திருளகற்றுமாங்கவற்றுள்
> மின்னேர்தனியாழிவெங்கதிரொன்றேனையது
> தன்னேரிலாததமிழ்.

[ஓங்கல் இடைவந்து-மலையினிடத்தில் தோன்றி, உயர்ந்தோர் தொழ விளங்கி-மேன்மக்கள் வணங்கும்படி விளங்கி, ஏங்கு ஒலி நீர் ஞாலத்து - இரைந்து ஒலிக்கின்ற கடலால் சூழப்பெற்ற உலகத்தின், இருள் அகற்றும் ஆங்கு அவற்றுள் - இருளை அகற்றுகின்ற இரண்டு பொருள்களில்—மின் ஏர் தனி ஆழி வெம் கதிரோன் ஒன்று-ஒளியும் அழகும் உடைய ஒற்றைச்சக்கரத் தேரினையும் விரும்பப்படும் கதிரினையும் உடைய சூரியன் ஒன்று; ஏனையது - மற்றது, தன் நேர் இலாத தமிழ்- தனக்கு ஒப்பானது வேறொன்றும் இல்லாத தமிழ்—உதயகிரியில்தோன்றி அந்தணர் வந்திக்க உலகத்திருளை அகற்றிவைக்கும் சூரியனைப்போல், தமிழும் பொதியமலையில்தோன்றி மேலோர்களால் போற்றப்பெற்று உலகத்திலுள்ள அறியாமை என்னும் இருளைப் போக்கும் பெருமையுடையது என்பது இச்செய்யுளின்கருத்து]

இச்செய்யுளைப் படிக்குங்கால் எங்கெங்குச் சற்று நின்றால் செவிக்குச் செவ்விதாய் இசைக்கின்றதோ அங்கங்குச் சற்று நிறுத்திப்பாருங்கள்; அவ்விடத்திலேயே சொற்களும் சிதையாமல் பிரிவதுமாகும்.

> ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
> ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்று—மாங்கவற்றுள்
> மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
> தன்னே ரிலாத தமிழ்.

என்று இப்படிப் பிரிந்தாலல்லது ஓசையும் பொருளும் இணங்கிநடந்து இன்பம்பயக்காது இச்செய்யுள். இதை உணர்வதற்கு, ஒவ்வொரு அடியாய் எடுத்துக்கொண்டு வேறுவிதமாய்ச் சொற்களைச் சேர்த்துச் சீர்பிரித்துப் பாருங்கள். வார்த்தைகள் சிதையாமல் சேர்வதுபோல் தோன்றினும் ஓசை சிதைவது தென்படும். உதாரணமாக, முதலடியை,

ஒங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி என்றும்,

ஓங்கலிடை வந்துயர்ந் தோர் தொழ விளங்கி என்றும் சீர் பிரியும்படி சொல்லிச்சொல்லிப் பார்த்துப் பிறகு நாம் பிரித்துக் காட்டியபடி

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழ விளங்கி என்றும் சொல்லிப் பார்ப்பீர்களானல் இப்படிப் பிரிந்து இசைப்பதே காதிற்கும் மனதிற்கும் ஒவ்வி அமைகின்ற தன்மை விளங்கலாகும். இன்னொரு செய்யுளும் எடுத்துப் பயில்வோம் :—

போர்க்குப்புணைமன்புரையோர்க்குத்தாணுமன்
ஊர்க்குமுலகிற்குமோருயிர்மன்யார்க்கும்
அறந்திறந்தவாயிலடைத்ததாலண்ணல்
நிறந்திறந்தநீளிலைவேல்.

[போரில் இறந்த ஒரு வீரனைப் புகழ்ந்து பாடியது இச்செய்யுள்:—போர்க்கு - போரைக்கடந்து வெல்வதற்கு, புணைமன் - தெப்பம் போன்றவன் இவன் கழிந்தனன். புரையோர்க்கு - மேன்மக்களுக்கு, தாணுமன் - மலைபோல் நின்று தாங்குகின்றவன் இவன் கழிந்தான். ஊர்க்கும் உலகிற்கும் - தன்னுடைய ஊரிலுள்ளவர்களுக்கும் உலகத்திலுள்ளவர்களுக்கும், ஓர் உயிர்மன் - ஓர் உயிர் போன்றவன் இவன் கழிந்தான். அண்ணல் - இத்தகைய பெருமகனது, நிறம் திறந்த-மார்பைப்பிளந்த, நீள் இலை—நீண்ட அலகை உடைய, வேல் - (பகைவனது) வேலானது, யார்க்கும் - எப்படிப்பட்டவர்க்கும், அறம் திறந்த வாயில் - தருமம் செய்யும்பொருட்டுத் திறந்திருந்தவாயிலை, அடைத்தது - அடைத்துவிட்டது—மன் என்பது கழிவுப்பொருளைக் காட்டவரும் ஒரு இடைச்சொல். ஆல் - அசை. இவன் மார்பைத் திறந்த வேல் அறம்செய்யும் இவன் மனைவாயிலை அடைத்துவிட்டது, என்று பொருள் கூட்டிக்கொள்க]

இப்பொருளைப்பற்றியே, நிறுத்தவேண்டுமென்று தோன்றுகின்ற இடங்களில் நிறுத்திப் படிப்பதானல்,

போர்க்குப் புணைமன் புரையோர்க்குத்தாணுமன்
ஊர்க்கு முலகிற்கு மோருயிர்மன்—யார்க்கும்
அறந்திறந்த வாயி லடைத்ததா லண்ணல்
நிறந்திறந்த நீளிலை வேல்.

என்று சீர்கள் பிரிந்திசைக்கும். இதுவே ஓசைநயத்திற்கும் உகந்ததாய் இருக்கக் காண்பீர்.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[69-வது பக்கத் தொடர்ச்சி]

2. நகரச் சருக்கம்.

48. தேம்பழுத் தினியநீர் மூன்றுந் தீம்பலா
மேம்பழுத் தளிந்தன சுளையும் வேரியு
மாம்பழக் கனிகளு மதுத்தண் டீட்டமுந்
தாம்பழுத் துளசில தவள மாடமே. 14.

தேம்பழுத்து -வாசனை மிகுந்து, இனிய- இனிமையான, நீர் மூன்றும் - மூவகை நீர்களும், தீம் பலா-மதுரமான பலாவின்,மேம் பழுத்து அளிந்தன-மேன்மையாகப் பழுத்துக் கனிந்தனவான, சுளையும்-சுளைகளும்,வேரியும்-தேனும்,மாம் பழ கனிகளும்-மாம்பழங்களும், மது தண்டு ஈட்டமும் - கரும்பின் தொகுதியும், சில தவள மாடம் - சில வெண்ணிறமான மாளிகைகள், பழுத்து உள - மிகுதியாகப் பெற்றுள்ளன. தாம் - அசை.

நீர் மூன்று - நன்னீர் மோர் பானகம் போலும். 'மதுத்தண்டு' என்பதற்கு 'மதுப் பெய்து முழங்குகின்ற மூங்கிற் குழாய்' என்று ஓரிடத்திலும், 'வீரபானமிருக்குங் குழாய்' என்று மற்றோரிடத்திலும் சிந்தாமணி உரையில் நச்சினர்க்கினியர் கூறுகின்றார். இன்சுவைப்பண்டங்கள் மிகுந்திருந்தன மாடம், என்பது இச்செய்யுளின் கருத்து.

---

49. மைந்தரு மகளிரு மாலை காலையென்
றந்தரப் படுத்தவ ரறிவ தின்மையாற்
சுந்தரப் பொற்றுக டுதைந்த பொன்னக
ரிந்திர வுலகம்வந் திழிந்த தொக்குமே. 15.

மைந்தரும் - ஆடவர்களும், மகளிரும் - மாதர்களும், மாலை காலை என்று - இரவென்றும் பகலென்றும், அந்தர படுத்தவர் - கூடிப்படுத்தவர், அறிவது இன்மையால் - தெரிகின்றது இல்லாமையால், சுந்தர பொன் துகள் துதைந்த - அழகிய பொன்னின் துகள் அடர்ந்த, பொன்நகர் - (அமராவதி என்னும்) பொன்னகர் உடைய, இந்திர உலகம் - இந்திரலோகமே, வந்து - (பூலோகத்தில்) வந்து, இழிந்தது - இறங்கியதை, ஒக்கும் - (அந்நாடு) ஒக்கும்.

இடைவிடா இன்பம் நுகர்தலெனுங் காரணங் கூறி உவமைகாட்டுவதால் இது ஏதுவுவமையணி. 'அந்தரம்' என்பதற்குப் பலபொருள்கள் உளவேனும் இங்குக் 'கூட்டம்' என்னும் பொருளே பொருந்தியுளது.

---

50. மற்றமா நகருடை மன்னன் றன்னுய
ரொற்றைவெண் குடைநிழ லுலகிற் கோருயிர்ப்
பெற்றியான் பயாபதி யென்னும் பேருடை
வெற்றிவேன் மணிமுடி வேந்தர் வேந்தனே 16.

(மற்று - அசை) அ மா நகர் உடை மன்னன் - அந்தச் சிறந்த நகரத்தினுடைய அரசன், பயாபதி என்னும் பேர் உடை - பயாபதி என்னும் பெயருடைய, வெற்றி வேல் - வெற்றிபொருந்திய வேலாயுதத்தையும், மணிமுடி - இரத்தின கிரீடத்தையுமுடைய, வேந்தர் வேந்தன் - அரசர்களுக்கெல்லாம் அரசன், (அவன்) தன் உயர் ஒற்றை வெண்குடை- தனது உயர்ந்த ஒப்பற்ற வெண்மையான குடையின்,

நிழல் - நிழலில் வாழ்கிற (அதாவது அவனதாட்சியி லடங்கிய) உலகிற்கு - சனங்களுக்கெல்லாம், ஓர் உயிர் பெற்றியான் - ஒரு உயிர் போன்றவன் எனுந் தன்மை யுடையவன்.

உயிரும்உடலும்சேர்ந் தொருமனிதன் என்றுவது போல் பிரஜைகளும் அரசனும் சேர்ந்து ஒரு அரசு அல்லது இராஜ்யம் என்பது ஏற்படுகின்றது. இக்கவி அரசனை உயிராகவும் பிரஜைகளையுடலாகவும் பாவிக் கின்றார். உயிர் இல்லாக்கால் உடலழியும்; ஆனால் உட லின்றி உயிர் இருத்தலுங் கூடும். இவ்விரண்டி லுயி ரே பிரதானம். எனின் இச்செய்யுள், அரசனை முக்கி யாதமாக்கி உயிரின்பொருட்டே உடலிருப்பது போல் அவனது பெருமைக்கும் ஆட்சிக்கும் ஆளாவதற்கே குடிகள் இருப்பது, எனுங் கருத்தைத் தருகின்றது. ஆயுங்கால் அரசியலின் தத்துவநுட்பம் அதுவன்று. உயிரிற்கோ ராதாரமாய் உடல் இருப்பதுபோன்றே பிரஜைகள் தம் அறம்பொருளின்பம்வீடெனும் நாற் பொருளையும் அடைதற் காதாரமாயவோர் துணைக் கருவியே தானெனும் தன்மை யறிந்த வேந்தனே தன் முறைகண்டவேந்தனாவான். "மன்னுயிரெல்லாம் மண்ணாள் வேந்தன் தன்னுயிர்" என்று உதயகுமார னுக்கு எடுத்துக்காட்டிய மணிமேகலா தெய்வத்தின் வாக்கும் இதுவேயெனச் சீத்தலைச்சாத்தனார் இனிது விளக்குகின்றார்.

மற்று, இங்குத் தோலாமொழித்தேவர், அவன் குடைநிழல் பரவுமிடத்துளோர்க்கே பயாபதி உயி ரெனும் பெற்றியான், என்றனர். தொடரமைப்பை யும் முழுக்கருத்தையும் நோக்குங்கால் இப்பிரிநிலை ஏகாரம் தொக்குளதென்பதற் கையமில்லை. ஆனால், அன்பெனும் தூய தன்மைக்கு எல்லைதொன்று மில்லை யாதலால் தனதென் றொரு நாடு மதற்கில்லை. நாடள வளவெனு மன்பு நல்லன்பன்று.

இவ்விரண்டு மதங்களையும் மறுத்து, அரசு அன்பு எனுந் தத்துவங்களின் மெய்ந்நிலை இதுவென வுணர்த் தற்கோ கம்பர்,

வயிரவான் பூணணி மடங்கன் மொய்ம்பினான்
உயிரெலாந் தன்னுயி ரொப்ப வோம்பலால்
செயிரிலா வுலகினிற் சென்று நின்றுவாழ்
உயிரெலா முறைவதோ ருடம்பு மாயினான்.

எனத் தயரதனைப் பாடினர். கோசலநாட்டில் வாழு முயிர்களுக்கு மாத்திரமன்று, எல்லா உயிரும் உறை வதான ஒரு உடம்பே தயரதன், பயாபதிக்கு மாறாக, ஆயதே பெருமையும் சிறப்புமாகும்.

51\. எண்ணின ரெண்ணகப் படாத செய்கையா
னண்ணிய ரகன்றவர் திறத்து மாணையா
னண்ணுநர் பகைவரென் றிவர்க்கு நாளினுந்
தண்ணியன் வெய்யனந் தானை மன்னனே. 17.

அந்தானை மன்னன்-அழகிய சேனையையுடைய அர சன், எண்ணினர்- (இவனது செய்கையின் மேன்மை எவ்வளவுதான் உயர்ந்தது யிருக்கும் என்று) மதிக் கின்றவர்களுடைய, எண்-கருத்திற்கும், அகப்படாத (அடங்காத) மேம்பட்ட, செய்கையான் - (தூய) செய்கைகளைச் செய்பவன், அண்ணியர் - (தனக்கு) நெருங்கினவர் (திறத்தும்), அகன்றவர் - நெருங்காத அயலார், திறத்தும் - இடத்திலும், ஆணையான் (பக்ஷ பாதமின்றி ஒரேவகையாய்ச் செலுத்தும்) நீதியை உடையவன், நண்ணுனர் - நண்பர் பகைவர் - விரோ தி கள் என்ற இவர்களுக்கு - என்ற இருதிறத்தார்க்கும், நாளினும் - எக்காலத்திலும், தண்ணியன் - குளிர்ந்த கருணையுடையவனும், வெய்யன் -(அவர்களால் விரும் பப்படுகின்றவனும் ஆனவன்.

எண்ணினர் எண் அகப்படாத செய்கையான் - மாந்தரது எண்ணங்கள் பின்படச் செய்யும் செய்கை யன், செயற்கரிய செய்வார் பெரியர். பயாபதி மன் னன், பிறர் செய்வதற்கல்லாது எண்ணுதற்கும் அரிய செயல் செய்யும் பெரியவன் என்பது கருத்து. இப் பொருள் கொண்டே, "எண்பிறக்கொழிய விறந் தோய்" என மணிமேகலை புத்ததேவனைத் துதித்த தும் ஆகும்.

இந்த அடிக்கு மற்றொரு பொருளும் கூறலாம்:— தன் கருத்தைப் பிறரறியாவண்ணம் காரியம் செய்து முடித்துக் கொள்பவன். அதாவது, இன்னது செய் யப் போகின்றோனென்று முகக்குறிவாய்ச் சொல் முத லிய குறிப்புகளால் பிறரறிந்து கொள்ளாமல் தன் கருத்தை ஒளித்துவைத்திருந்து நினைத்த கருமத்தை யவர்களா லிடையூறின்றிச் சாதித்துக் கொள்பவன், என்பதாம். இது சாணக்கிய தந்திரமாகலாம்; இராஜ தருமமுமாகலாம். ஆனால் சாதாரண தர்மம். வாய் மையே வெற்றியென்னும் நம்பிக்கையின்றித் தம் சூழ்ச்சியால் சில சாதிக்க நினைப்பதெல்லாம் கடை யாய மானுடஇயற்கையே யல்லாது உத்தம சித்தத் தின் தன்மையன்று. இருபொருள் ஓரடி தருமிடத்து மன்னனுக்குப் பெருமை மிகுதியாக்கும் பொருள் கொள்ளலே சீரிது. அவ்வாறே,

அண்ணியர் அகன்றவர் திறத்தும் ஆணையான் - அகன்றவர் என்பது, உறவினர் பகைவரெனும் இரு பாலிலும் படாத நொதுமலரைக் குறிக்கின்றது. ஆணை, என்பது ஆக்ஞை என்னும் அதிகாரத்தைக் குறிக்குமாயினும், நடுநிலை பிறழா நீதி எனும் பொரு ளில் கொண்டோம். அதிகாரத்திலும் நீதியே உயர்ந் ததாதலின்.

இன்னும் பின்னிரண்டடிகளுக்கு- நண்ணிநர்க்குத் தண்ணியன், பகைவருக்கு வெய்யன், என முறைநிர னிறையாகப் பொருள்கொள்ளலாம். அப்போது, நண் பர்கள்பால் அன்புடையவனும் பகைவர்க்குக் கொடி யவனும் ஆனவன், என்று அர்த்தமாகும். வெம்மை - கொடுமை, எனும் பொருள்தரும் பண்பை உடைய வன் வெய்யன். பகைவர்க்குக் கொடியனாயிருத்தல் சாதாரண தர்மம், பொதுவிறந்த பெருமையன்று ஆதலால் விருப்பம் என்னும் கருத்துடைய வெம், எனும் உரிச்சொல்லடியாகப் பிறந்த பெயர் 'வெம் யன்' எனக் கொள்வதற்கும் இடமுளது. எனின் விரும்புவோன் அல்லது விரும்பப்படுவோன் என்று அர்த்தமாகும். அந்த அர்த்தத்தைப் பொருத்திப் பின்னிரு அடிகளையும் கருதினால்:—நண்பர் பகைவர் எனும் இருவகையோர்க்கும் இவன் அன்புடையவ னும், அவ்விருவரும் ஒருங்கே இவனது குணதி சயங்களைக்கண்டு விரும்பப்படுகின்றவனும் ஆயினான், எனும் பொருள் பயக்கும். பகைவர் இவனைக்கண்டு அஞ்சுதலைக் காட்டிலும், பகைவரும் இவனை விரும்பு வாராவது பெருமையன்றோ. இக்கருத்தில் முரணு மில்லை. இராவணன், "என்னைப் பரிபவ முதுகிற் பற் றப் பொரித்தபோ தன்னனந்தக் கூனிகூன் போக

வுண்டை செறித்தபோ தொத்த தன்றிச் சினவுண்மை தெரிந்ததில்லை,'' என்றும், ''நாசம்வங் துற்றபோது நல்லதோர் பகையைப் பெற்றேன்,'' என்றும் இராம னது ஆற்றலை வியப்போடு எடுத்துரைக்குங்கால் அவ் வியப்பில், பகைவனது வெறுப்புப் போமளவு விருப் பும் கலந்திருக்கின்றது.

பயாபதியை 'அம் தானை மன்னன்' என வழைத்த தும் இக்கருத்துப்பற்றியே. தன்மையால் தன் ஆணை செல நிறுவினுனல்லாது தன் சேனையின் பலத்தால் அதிகாரத்தை யவன் தாங்கினவ னல்லன். அரசியலில் சேனையுமொன் றிருத்தல் வேண்டும் எனும் முறைமை பற்றி அழகிற்கே சேனையையுடையவன் என்று தெரி கின்றது. கம்பரும் தயரதனது கோட்டையின் பலத் தையும் மதிலுறு பொறிகளின் வன்மையையும் வரு ணித்த பிறகு இவை, 'நகருக் கணியென வியற்றிய தன்றே'' என்று முடித்துளார். மாறுகொண்ட மனத் தினர்தம்மை,ஆற்றலினும் அருளே தப்பாமல் அடக்க வல்லது என்பதைக் கிருஷ்ணன் தூதுச் சருக்கத்தில், "அரவுயர்த்தோன் கொடுமையிலு முரசுயர்த்தோய் நினதருளுக் கஞ்சினேனே!''எனவீமனைச் சொல்வித்த வில்லிப்புத்தூரர் வாக்காலும் அறியலாம்.

---

52. நாமவே னரபதி யுலகங் காத்தநாட்
காமவேள் கவர்கணை கலந்த தல்லது
தாமவேல் வயவர்தந் தழலங் கொல்படை
நாமநீர் வரைப்பக நலிவ தில்லையே. 18.

நாம வேல் - அச்சத்திற்குக் காரணமான வேலாயுத த்தையுடைய, நரபதி - (பயாபதி என்னும்) அரசன், உலகம் காத்தநாள்-உலகத்தை ஆண்டகாலத்தில், காம வேள்-மன்மதனுடைய, கவர்-(கருத்தைக்) கவர்கின்ற, கணை (மலர்) அம்புகள்,கலந்தது அல்லது - (மனதில்) பட்டதே யல்லாமல், தாமம் வேல் - மாலை சூட்டிய வேலை எந்திய, வயவர்தம் - போர்வீரர்களது, தழல் - தீப்போன்ற, கொல்படை - கொல்கின்ற யுத்த ஆயு தம் எதவும், நாமநீர் - அச்சந்தருகின்ற கடலை, வரைப்பு அகம் - எல்லையாக உள்ள இடத்தில் (அதா வது உலகத்தில்), நலிவது - வருத்துவது என்பது, இல்லையே - இல்லையாம்.

ஆதலால் இச்செய்யுளும் முன் 'அந்தானைமன்னன்' என்ற கருத்தைச் சார்ந்திருக்கின்றது. யாரையும் தம் படையால் துன்புறுத்தும்படைஞர் அங்கிருந்ததில்லை. கணை எய்வ தெல்லாங் காமனொருவனே.

நாம், என்பது அச்சப்பொருள் தருமோர் உரிச் சொல். கவர் கணை-வினைத்தொகை.

---

53. ஆறிலொன் றறமென வருளி னல்லதொன்
றூறுசெய் துலகினி னுவப்ப தில்லையே
மாறிநின் றவரையும் வணக்கி னல்லது
சீறிநின் றெவரையுஞ் செகுப்ப தில்லையே. 19.

(குடிகள் தம் வருவாயில்) ஆறில் ஒன்று - ஆறி லொருபாகம், அறம் என (அரசனுக்குக் கொடுப்பது தம்) கடன் என்று, அருளின் அல்லது (தாமாகவே அன்போடு) கொடுத்தால் அல்லாது, ஒன்று - சிறி தேனும், ஊறு செய்து - (இறைவாங்கும் நிமித்தம் குடிகளுக்கு) துன்பம் செய்து, உலகினின் - உலகத் தில், உவப்பது - (இறைப்பொருள் மிகுதியால் அவ் வரசன்) பெருமிதம் அடைவது, இல்லையே - (எந் நாளும்) இல்லை. மாறி நின்றவரையும் - (தன்னோடு) மாறுபட்டவரையும், வணக்கின் அல்லது - (சாம பேத தானங்களால்) இணங்கச் செய்யக் கூடுமா யின் அப்படிச் செய்தானேயல்லாது, சீறி நின்று - கோபங்கொண்டு, எவரையும் செகுப்பது இல்லை - யாரையும் அவன் கொல்வது இல்லை.

பகைவர்க்கும் தண்ணியன் வெய்யன், என்றதற்கு அங்குக் கூறிய பொருளிற்கு இச்செய்யுளும் முன் பின் செய்யுள்களும் ஆதாரமாகின்றன.

---

54. அடிநிழ லரசரை யளிக்கு மாய்கதிர்
முடிநிழல் முனிவரர் சரண மூழ்குமே
வடிநிழல் வனைகதி ரெஃகின் மன்னவன்
குடைநிழ லுலகெலாங் குளிர நின்றதே. 20.

(அம்மன்னனது) அடிநிழல்-பாதங்களது நிழல், அரசரை - (தன்னைப் பணிந்து தஞ்சமெனப்புகுந்த) அரசர்களை, அளிக்கும் - காப்பாற்றும். (அப்படி யிருக்க அவனது) ஆய்கதிர் முடிநிழல் - ஆய்ந்த மணிகளழுத்திய கிரீடத்தின் ஒளி, முனிவரர்-முனி சிரேஷ்டர்களது, சரணம் - பாதங்களில், மூழ்கும் - படியும். வடி - வடித்தலை,வனை -செய்த, நிழல் - ஒளி பொருந்திய, கதிர் - முள்ளிலைகளையுடைய, எஃகின், வேல்தாங்கிய, மன்னவன்-பயாபதி அரசனது,குடை நிழல் - குடையின் நிழலிலுள்ள, உலகெலாம் - நாடு முழுவதும், குளிர - குளிர்ச்சியடைந்து, நின்றது - நின்றது.

ஆய்கதிர், என்பதை ஆயிழை என்றது போல வினைத்தொகையின் புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாகவும் கொள்ளலாம். ஆய்ந்த ஒளியுடைய மணிகள், கதிர் உடைய சூரியனைக் கதிர் என்பது போல் இங்குக் கதிர் உடைய மணியைக் கதிர் என ஆகுபெயராய்க் கொள்ளினுமமையும். கதிர் - ஒளி. பின், வனைகதிர் என்னுமிடத்து வேலாயுதத்தின் முட் களைக்குறிக்கும். கதிர் எஃகு - கதிர்வேல் எஃகு - எறிபடை. இனி, எஃகு என்பதற்கு ஆக்ஞாசக்கரம் என்னும் அர்த்தமும், நிழல் என்பதற்கு அருள் எனும் அர்த்தமும் இருக்கின்றன. எனின், 'வடிநிழல் வனைகதிரெஃகு' - வடித்தெடுத்த அருளால் செய்த ஒளியுடைய சக்கரம் நடத்தும் மன்னன். கவியின் கருத்திற்கு இப்பொருளே இயைந்ததாமென எண்ண இடமுளது.

வரர், என்பது வடமொழி வரம் என்றதனி லிருந்து ஆயது. வரம் - சிரேஷ்டம்.

வடித்தல் - காய்ச்சியடித்தல் அல்லது மாசுநீக்கி வடிக்கட்டல். நிழல் உலகம் - ஏழாம் வேற்றுமை உருபும்பயனும் உடன்தொக்க தொகை. உலகம் நின்றது என முடிக்க. நிழல் நின்றது என முடித்தா லும் பிழையாகாது. அப்போது உலகம் என்பது சரா மையை மாத்திரமல்லாது உலக முழுவதையுங் குறிக் கும். ஆனல், முன் 50-வது செய்யுளில் 'கொற்ற வெண்குடை நிழலுலகிற் கோருயிர்ப் பெற்றியான்' என்றதற்குக் கூறிய பொருளோடு சிறிது முரண்படு மென்பதொன்றேயாம். மற்று, அங்குக் காட்டிய குறைவு மிங்குத் தீர்ந்ததென் றெண்ணலாம்.

---

55. மன்னிய பகைக்குழா மாறும் வையகந்
துன்னிய வரும்பகைத் தொகையு மின்மையாற்
தன்னையுந் தரையையுங் காக்கு மென்பதம்
மன்னவன் றிறத்தினி மருள வேண்டுமோ 21.

மன்னிப - (ஒன்றோடொன்று) பொருந்திப், பகைகுழாம் - உட்பகைக்கூட்டம், ஆறும் - (காமம் குரோதம் லோபம் மோகம் மதம் மாற்சரியம், என்னும்) ஆறும், வையகம் - பூமியில், துன்னிப - நெருங்கிய, அரும் பகை தொகையும் -(தீர்த்தற்கு) அருமையான (அரசபரிஜனம், பகையரசர், கள்வர், துஷ்டவிலங்குகள் ஜந்துக்கள் போன்ற) பகையின் கூட்டமும், இன்மையால் - (அவ்வரசியலில்) இல்லாததால், தன்னையும் - (முன்னது இல்லாததால் அவ்வரசன் தீநெறிக்கண் செல்லாமல்) தன்னையும், தரையையும் - (பின்னதில்லாததால் தீதுறாமல்) பூமியையும், காக்கும்-காத்தான், என்பது - என்பதை, அம்மன்னவன் திறத்து - அவ்வரசனைப்பற்றி, இனி - இனி, மருள வேண்டுமோ - சந்தேகங்கொள்ள வேண்டுமோ! (வேண்டியதில்லை.)

துன்னிய வரும்பகை - துன்னிய என்பதைச் செய்யிய என்னும்வாய்பாட்டு வினையெச்சமாகக் கொள்ளலாம் - நெருங்குதற்கு வருகின்ற பகை.

56. மேலவர் மெய்ப்பொருள் விரிக்கும் வீறுசா
னூலினாற் பெரியவர் நுழைந்த சுற்றமா
வாலுநீ ரன்னமோ டரச வன்னமே
போலநின் றுலகினைப் பொதுமை நீக்கினான் 22.

மேலவர் - உயர்ந்த ஆசிரியர்களது, மெய்ப்பொருள்- உண்மை அர்த்தத்தை, விரிக்கும் - விரித்துரைக்கும், வீறுசால் - சிறப்புமிகுந்த, நூலினால்- நூல் கல்வியால், பெரியவர் -பெரியோரை, நுழைந்த-(தனக்கு) நெருங்கிய, சுற்றமா - சுற்றத்தினராக (அமையப்பெற்ற அம்மன்னன்), ஆலும் - களித்தாடும், நீர்-தன்மையையுடைய, அன்னமோடு - அன்னங்களின் கூட்டத்தினிடையே, அரச அன்னமே போல் - இராஜ ஹம்ஸத்தைப்போல், நின்று - அமர்ந்து, உலகினை-(தானாளும்) நாட்டை, பொதுமை நீக்கினான் - அசாதாரணமாகும்படி செய்தான்.

கற்றவரையே இவ்வரசன் தனக்கு ஏற்ற குழுவினரா யமர்த்திக்கொண்டா னதலால் அவனாளும் நாடு பிறநாடுகளுக் கில்லா வொரு சிறப்புவாய்ந்து ஒப்பற்றதாகியது, என்பது இச்செய்யுளின் கருத்து.

தனிப்பாடல்கள்

நவாலி. க. சோமசுந்தரம் பிள்ளை.

முருகன்.

வாழ்கசிவ சிவமுருகன் வாழ்கவவன் கைவேல்
வாழ்கவவ னேறுமயில் வாழ்கொடிச் சேவல்
வாழ்கதெய்வ யானைகுற மாதுபுவி மீது
வாழ்கவவ னுமடி யார்பொலிக மாதோ. 1.

* * *

பற்றுமுற்றுஞ் செற்றுப் பரவெளியிற் றாங்குகின்ற
நற்றவமும் பேறுமெனை நண்ணுநா ளெந்நாளோ;

ஆசைமுற்றுஞ் செற்றே வருள்வெளியிற் றாங்குகின்ற
பேசலற்ற மோனம் பிறக்குநா ளெந்நாளோ

முக்குற்றம் நீங்கி முடிவி லருள்வெளியில்
புக்கு மறந்து புணர்ந்திருப்ப தெந்நாளோ

விரும்பும் முகமாறும் வெற்றிவே லும்மயிலும்
திரும்புந் திசைதோறும் தெரிகின்ற தெந்நாளோ

வடித்த செழுந்தமிழும் மாறுவருளு மொன்றாய்க்
குடித்து மகிழ்ந்தேப்பங் கொள்ளுநா ளெந்நாளோ 2.

* * *

ஐந்தொழில் வல்லிபுல்லு மம்பலத் தரசுவாழி
முந்தியவ் வரசிற்றோன்று முழுமுத லத்திவாழி
சந்தவேல் பிடித்துவீரை தன்னிலோர் மாவைச்சாடி
வந்துமான் வேட்டவேங்கை மாமரம் வாழிமாதோ 3.

* * *

கந்தமாவனத் தாயோலம் கதிர்வடி வேலாவோலம்
செந்திலம் பதியாயோலம் திருப்பரங் கிரியாயோலம்
முந்துமே ரகத்தாயோலம் முக்கணன் மகனேயோலம்
பந்தனை யறுக்குமட்ட கிரியுறை பரனேயோலம் 4.

* * *

அறிவா யருவா யமர்ந்தநிலை நீங்கிச்
செறிவா யுருவாகிச் சேர்ந்தே—இருளேகச்
செய்ய திருவடியைக் காட்டியருள் செய்தாண்ட
ஐயனடி யென்று மரண். 5.

* * *

எல்லாமா யல்லவுமா யிருக்கின்ற பொருளை
யானறியா தென்னுள்ளே யினிக்கின்ற பொருளைக்
கல்லாதார் நெஞ்சகத்தே கலவாத பொருளைக்
காலமொடு கற்பனைகள் கடந்தபரம் பொருளை
வல்லார்க்கும் மாட்டார்க்கும் வரமருளும் பொருளை
வள்ளிதெய்வ யானையுடன் மகிழ்கின்ற பொருளைச்
சொல்லாகிப் பொருளாகி யப்பாலாய் நின்ற
சுடர்வேற்கைப் பரம்பொருளைத் துதிப்பவர்தாள்
துதிப்பாம் 6.

* * *

ஒன்றாகி யிரண்டாகி யொருமூன்றாய் நான்காய்
ஓரைந்தா யாறாகி யேழுபிறப் பறுக்கும்
நன்றாகி யெட்டுவடி வாகிநவ பேத
நலமாகி யுலகமெலா நயந்து துதித்திறைஞ்சக்
குன்றாகி யரியாகி மாவாகி யாளாய்க்
குலவுமசுரர் குலமுழுதுங்குறைத்தழித்தகுமரன்
பொன்றாத வருள்ஞான பூரணப் பொற்பாதம்
போற்றுவார்திருவடிகள்போற்றுகின்றோம்யாமே 7.

* * *

அரகர சிவசிவ முருக குருபர
அறுமுக வெனதுயிர் தழையவருள்புரி
மரகத நிறநட மயிலின் மிசைவரு
மறைமுடி தடவிய கமல மலர்புரை
அரணுறு கழலடி யடியவர் தலைமிசை
அவர்மல மகல்வுற வருளு மொருகுக
வரவர விருவினை கொடிய மிடிபிணி
மதமற நனியினி மகிழ்வு பெருகவே. 8.

என்னுயிர்க்குயிரான யன்பினிருப்பிடமாகி யெங்கும்
மன்னியவறிவா யாறுமாமுகம் படைத்த சேயாய்
தன்னிகர் தலைவனுகிச் சாமியா யுலகமுய்ய
முன்வரு முருகன்செய்ய முளரியந்தாள்கள்போற்றி 9.

காமமுதற் குற்றங்கள் கடிகின் றானைக்
கற்பனையுந் தத்துவமுங் கடந்து நின்ற
பூமலிந்த செங்கடம்பின் றொடைய லானைப்
பொல்லாத சூரனையும் பொருள்செய் தாண்ட
சேமமலி செஞ்சதங்கைத் திருத்தா ளானைக்
செங்கைநெடு வேலானைத் தேனைப் பாலைக்
காமர்மர கதமயிலின் மேலே நின்ற
கற்பகத்தை யற்பகத்தே கருதி வாழ்வாம் 10.

பத்துக் கொண்டிடு மாறுநிரம்பிய பனிமதி குனியுமுகப்
பாதிப் பிறையணி சோதித்திருநுதல்பவளக் கனிமொழிவாய்
முத்துக்கொன்டபல்நத்துப்பொற்களமுதிர்வேய்மருள்தோள்
முளரிச் சீறடி ககனத் தரசருள் மொய்குழ லிணைமுலையை
ஒத்துக்கொண்டெழுகொத்துப்பைந்தொடைமோரீராறுபுயத்
தொப்புச்செந்தமிழ்செப்புத்தொண்டர்களுளநிறையொருமுரு
சித்தித் திருவருள் முத்திக்குகனிரு சேவடி காவுமடல் [கன்
தித்தித்திமிநடவெற்றிப்பொறிமயில் தீவினைபோக்கிடுமே11.

நாமகள்.

உயிருக்கு ளுருவாகி யுணர்வாகி யுள்ளே
உவட்டாத தேமதுர மொழுகுதமி ழுருவாய்ச்
செயிரற்ற நாவினிலே தித்திக்குங் கவியாய்ச்
செவியினிடைக் கேட்கின்ற தீங்கரும் பேதேனே
குயிலொக்கக் கூவுகின்ற வேழிசைக்கோ மளமே
கோகனகத் தோதிமமே குறியநடைப் புறவே
மயிலொத்த பூஞ்சாயற் செய்யவாய்க் கிளியே
மணிவிளக்கே யருளுன்னை மறவாத வரமே

சந்தனப்பொருப்பிற் றேன்றிச் சவைப்பெருந்தொட்டிலேறி
அந்தமில் வைகை நன்னீ ரழகுறத் தவழ்ந்து போந்து
சுந்தர வெரிமே னின்றுதொண்டர்க ளுவில் வாழும்
பைந்தமிழ்ப் பனுவ லாட்டி பாததா மரைகள் போற்றி.

உள்ளத் தடத்தரும்பி யொண்செவியி லேமலர்ந்து
கள்ளமிலா நாவில் மணங்கமழும்—வள்ளக்
கடித்தா மரைமணியைக் கைகூப்பி யென்று
மடித்தா மரைவணங்கு வாம்.

பூமே லோதிமம் புலமைப் பொற்குயில்
நாமேல் நடநவில் மஞ்ஞை
பாமேல் நடக்கும் பதங்கள் சென்னியவே.

வெண்டா மரைமேல் விளங்குகின்ற வோதிமமே
கண்டா லினிக்குங் கரும்பேயென் கண்மணியே
ஒண்டார்ப் பசுங்கிளியே யுள்ளத்தொளிர் விளக்கே
தண்டாப் புலமை யருள்தாயே சரணுனக்கே.

கண்ணிரண்டுங் கயல்போலும் வடிவி னாளைக்
கையிரண்டும் யாழிசையைக் காட்டி னாளை
எண்ணிரண்டும் நூல்வடமு மேந்தி னாளை
இசையிரண்டும் ஒரைந்தும் இசைக்கின் றாளை
முன்னிரண்டு வினையில்வரு மூடம் போக்கி
மூதறிவுச் சுடரருளு மொழி யினாளைத்
தன்னிரண்டு சேவடியென் றலைமேல் வைத்த [மே
தண்டமிழ்த்தெய்வத்தையென்றும்சரண்புக்கோ

சங்கத் தார்மணி நாவினி லேபதம்
தங்கத் தாதெயென் றாடிய மாமயில்
பங்கப் பாடறு மேழிசை யாழிசை
பண்புற் றுருயிர் வாழ்வுறக் கூங்குயில்
எங்குற் றார்களுஞ் சேவடி தாழ்வுற
இன்பத் தூமொழி வாய்மொழி பைங்கிளி
பங்கத் தாமரைப் போதென வென்னுளப்
பைம்பொற் றாமரை மீதினு மேவுமே.

அன்னமே இன்பம் அளிக்கும் பசுங்கிளியே
வன்னமே வுங்கமல வாணியே—உன்னை
இரந்தே னடியே னிறந்தாலும் மேலை
வரும்பிறப்பு மென்னுவில் வா.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,

நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.

சோல் ஏஜண்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்

குழந்தைகளுக்கு:
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்
ளுக்கு ரூ. (1-8-0)பிரான்சு:

டிப்போ, பம்பாய்
கல்கத்தா

NANJANGUD TOOTH POWDER
SADVAIDYASALA, NANJANGUD

மதுரை
காஞ்சீபுரம்.

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 3. கைகேசி சூழ்வினைப் படலம்.

[73-வது பக்கத் தொடர்ச்சி]

மடவாரைக் கோடியாரேன் றுரைக்கப் பற்றுமோ.

"சீதை கேள்வனைக் கானகத் தின்றுநீ போக்குதி"

எனப் பாம்பினுங் கொடியளாவால் கைகேசி தந்த சோகவிடந் தொடரத் தயரதன் வேகமடங்கிய வேழமென்னப் பூதலத்தில் வீழ்ந்து புரண்டு வெய்துயிர்த்தெழுந்து பாவியைப் பற்றியெற்ற ஒருகால் எண்ணுவானேனும் பெண்ணெனவுற்ற பெரும் பழிக்கு நாணி மீண்டும் வெம்பி விழுந்தழும் விம்மல் கண்டு வெய்துற்று

உம்பர் நடுங்கினர் ஊழிபேர்வ தொத்தது
அம்பன கண்ணவள் உள்ளம் அன்னதே

என்பர் கம்பர். கைகேசியின் உள்ளம் என்னதாகி நின்றதென் றுணர்தலிங்கு அரிதாகிக் கிடக்கின்றது: உம்பரையும் ஊழியையும்போல் அவளது உள்ளமும் மன்னவன்படு மாதுயர் கண்டு நடிங்கிப் பேர்ந்ததோ அல்லது முன்னேபோல் வன்மையொடு அசையாமல் நின்றதோ அறிகிலேம். வலிந்து கொண்டாலன்றி இப்பின்னைய பொருளிற்கு அச்சொற்கள் இடந்தந்தில. இதனோடு,

அஞ்சல ளையன தல்லல் கண்டு முள்ள
நஞ்சில ளணில ளென்ன நாண மாமால்
வஞ்சனை பண்டு மடந்தை வேட மென்றே
தஞ்சென மாதரை யுள்ள லார்க டக்கோர்

என்னும் அடுத்த செய்யுளுஞ் சேர்ந்து கம்பரது கருத்து யாதெனப் பெரிதுந் திகைக்கச்செய்கின்றது. "ஐயனது அல்லல்கண்டு இவள் அஞ்சினாளல்லள், உள்ளம் நைந்தாளல்லள், நாணங்கொண்டிலள், என் பதை எடுத்துரைக்க எனக்கே நாணம் விளைகின்றது" என்னப் பொருள்கொண்டால் முன்செய்யுளில் 'அன்னதே' என்னுஞ் சொல் அசையாதிருந்த அவள் கொடுமன வன்மையைக் குறித்ததாகும். 'நஞ்சிலள்' என்பதை 'நைந்திலள்' என்பதன் போலியாகக் கொள்ளாது, 'உள்ளத்தில் யாதும் விஷம் இல்லாதவள்' என்று பொருள்காண்பதும் ஒருவாறு அமையலாம். ஆயின், "உள்ளத்திற் சிறிதும் விடமில்லாதவளாதலின், ஐயன் படுகின்ற அல்லலைக்கண்டும் தான் குறித்தசெய்கைக்கு அஞ்சினாளல்லள்நாணினாளல்லள் என்றவளை நிந்தித்துரைக்க யான் கூசுகின்றேன்" என்னும்பொருளை முதலிரண்டடிகள் ஏற்கும். எனின், அவள் நின்றநிலையை நோக்கியக்கால் அச்சமும் நாணமும் அற்றவள்போல் தோன்றினாளேனும் நஞ்சிலா அவளுள்ளம் உம்பர்போல் நடுங்கி ஊழிபோல் பேர்ந்தது என்ற கருத்து எய்துகின்றது. வேந்தனது வாய்மையைக் காத்தளிக்கும் பொருட்டே தீயகயத்தியின் வேடத்தைத் தாங்கிய உத்தமியாவாள் இக் கைகேசியென்ற ஸ்ரீமான் சோமசுந்தரபார தியாரது கொள்கையையே கம்பருங்கொண்டிருந்தனரோ என்னும் ஐயம் இப்பொருள்பற்றி விளைவது இயற்கையே. ஆயினும், கைகேயியின் உள்ளத்துறைந்த உண்மையைக் கம்பரும் இத்தருணத்தில் அறிந்திருக்கவில்லையென்றும், ஆதலாற்றான் அவளை இங்குக் கொடியவளென்றும் கயத்தியென்றும் வைகின்றா ரென்றும், பின் இராமன் பரதனுக்குரைத்த சொற்களைக் கேட்டபோது தான் கம்பரே அச்சுலக்சூளுண்மையை உணர்ந்து கொண்டாரென்றும், ஸ்ரீமான் பாரதியாரவர்களே தம் நூலின்கண் ஓரிடத்தில் உரைக்கின்றாராதலின் அச் சங்கையை நாமிங்குப் பாராட்டி நிற்கவேண்டா. மற்று இமையோர் புரிந்த மாயையால் கேகயன்தனையை இவ்வண்ணம் ஒழுகலுற்றாள் என்று கம்பர் முன் காட்டிய வாய்மையைக் கடைபிடித்துப் பார்க்குங்கால்,இவளது உள்ளம் நடுங்கியதும்,நஞ்சிலா உள்ளத்தளாய அவள்தன் புறச்செய்கைகளேபேகண்டு 'அஞ்சலள், நாணிலள்' என்றபழிக்க இக்கவிவரர் நாணியதும் பெரும்பாலும் பொருத்தமுடையன வாகலாம். இனி,

வஞ்சனை பண்டு மடந்தை வேட மென்றே
தஞ்சென மாதரை யுள்ள லார்க டக்கோர்

எனத் தொடரும் பின்னிரண்டடிகளும் பொருளில் இடர்புரிதற் குரியவைகளே. தயரதன் உரையாயின் இது தக்கதாகலாம்; மற்றிதுவோ கவிக்கூற்று. கணவனைக் கொன்ற தம்பியைமணந்து அவனோடு அரசு வீற்றிருந்த தன் புன்தொழில் அன்னையின் கயமையைக் கருதிக்கருதி உணர்வழிந் துழன்றுநைந்த ஹாம்லட் என்னும் டென்மார்க் தேசத்திளவரசன் ஷேக்ஸ்பியர்நாடகம் ஒன்றினில், "நொய்ம்மையே நின்பெயர் மாதராள் என்பதன்றோ" என்று அறத்தாறொழுகும் ஆற்றலில்லா எளிமைக்கு 'மாதராள்' என்னும் நாமஞ் சாற்றியதற்கிணங்க, கழிபெருங் காதல்காட்டிக் கருத்தெலாங் கொள்ளைகொண்ட விழியுடை மனையாளின்று வெவ்விய நிலையளாகி அழிவுறச் சொல்வாளாயின் பொதுவினில் மாதராரைப் பழிபடப் பகர்வதொன்றும் புதுமையாய்த் தோன்றா தன்றோ! ஆனால் தன்னுடைய அனுபவத்தின் பரிபவத்தால் நொய்ம்மைக்கோர் நாமம்விதித்த ஹாம்லட்டைப்போல் வஞ்சனைக்கிங்கு வேடமளித்தவன் தயரதனல்லாமல் கவியேயாய் நிற்பதற்குத்தான் காரணங் காண்பதரிதாகின்றது. இச்செவ்வியில் சோதிக்கச் சுவையுடைய வாசகமொன்று வான்மீகத்தில் உளது. கைகேசியைக் கடிந்துரைத்த தயரதன் அங்கு, "இராமனை வனத்துட் போக்கிப் பரதனுக்கு முடியைச் சூட்டு என்னும் இவ்வெதிர்பாராக் கொடுமையை யாவரே ஆற்றவல்லார்......பெண்கள் கெட்டார்கள்; வெகு துஷ்டகுணம் உள்ளவர்கள்; தமது காரியத்தையே விரும்புகின்றவர்கள். ஐயோ எல்லாப் பெண்களையும் நான் ஏன் வீணாக நிந்திக்க வேண்டும்! பரதனது தாயாகிய உனது குணமே இவ்வண்ணம் இருக்கின்றது" என்று வெகுளியின் வேகத்தால் மாதரைப் பொதுவுறப் பகைத்த மயக்கத்தினின்றும் விரைவிற் றெளிந்துகொண்டனன். கம்பருக்குக் கைகேசியின் பால் மூண்ட சீற்றம் அதனினும் பெரியதோ! ஆறமாட்டே னென்றுநின்று, "பெண்ணாட்டமொட்டேனினிப் பேருலகத்துள்" எனக் கொதித்தெழுந்து விற்

கொண்ட கையனுய்க் கறங்கிய இலக்குவனுக் கிணை
யாக அப்புலவர்பிரானைச் சொற்கொண்டு மாதரைத்
தூற்றுவிப்பது! மயக்கறு காட்சி மாபெரும் புலவர்
கயப்புற மாதரைக் கழறினு ரெனின், வாய்மையேயோ
வது; மற்று விளைபொருள் வேறுதா னுளதோ வென
ஐயுற வெய்தலல்லால் செய்வகை தேர்தலரிது. இத
னேடு, மருள்தரச் சிலர் உரைத்த மாற்றங்கள்
வேறென்றிரண்டுமுள. நித்தமும் நினைத்தாலும் பாவ
மெலாம் நீங்குமென நிலைத்தபேர் மாதரார் ஐவருள்
ஒருத்தியாயதிரௌபதியின் பெருங்கணவன் யுதிட்டி
ரன், "கொடிதினுங் கொடியது மடந்தையர் இத
யமே" என இயக்கனுக்கு விடைபகர்ந்த விந்தை
யினை வியாதமுனிவரே வகுத்துரைக்கின்றார். பெண்
மக்கள் கற்பிற்குக் கரியாய் வானளாவித் திகழ்கின்ற
அருந்ததிக்கு நாயகனும் வசிட்டமாமுனிவர்,

தூம கேது புவிக்கெனத் தோன்றிய
வாம மேகலை மங்கைய ரால்வருங்
காம மில்லை யெனிற்கடுங் கேடெனு
நாம மில்லை நரகமு மில்லையே

என்று இராமனுக் கறிவுறுத்தினரென வோதினர்
கம்பர். வரைவின் மகளிரை மனத்திற்கொண்டு
அருந்ததியின் தவக்கிழவன் கூறியமாற்றம் இது
வாயின் மேனகையின் காமத்தால் தவமிழந்த கோசி
கன் அவட்கெதிராய பத்தினிப்பெண்டிரைப் பெரிது
வந்து பாராட்டி,

'தங்கள் நாயகரில் தெய்வம் தவம்பிறிதிலவென்றெண்
மங்கைமார் சிந்தைபோலத் தூயது' [ணும்

எனச்செங்கண்மால் தவங்கிடந்த நிலத்தின் தூய்
மைக்கோர் உவமை நயந்துகூறினன் கோசிகன்.
இக்கோசிகன் கூற்றிற்கும் ஆசிரியன் கம்பனே. வாசு
கியாரின் கொழுநராம் தூய்மையுடைய வள்ளுவர்,
"இனம்போன் றினமல்லார் கேண்மை மகளிர் மனம்
போல வேறுபடும்" என்று சாற்றுவதே ஏற்றஉவமை
என்றெண்ணியதும் வியப்பாமே. இன்னர் இருக்க,
கோசலையையும் சுமித்திரையையும் சனகன்மா மகளை
யும் மண்டோதரியையும் தன்மனப்படி நனிபடைத்து
அவர்களோடு 'பயன்றுவந்த செவ்வியுஞ் சேர்ந்தவ
ராய கம்பர், வஞ்சனைபண்டு மடந்தை வேடமென்றே
தக்கோர் அவர்களை உள்ளலராயதும் தக்கதே எனச்
சாற்றியதை என்னென் றெண்ணிப் போற்றுவது.
இமையவர் கைகேசியின் மனத்தினைத்திரிக்க அவள்
கம்பர் மனத்தைத்திருப்ப அதனால் கம்பர் மாதரி
னத்தையே இவ்வண்ணம் திரித்து விட்டாரோ;
மற்று இவ்விறுதித்திரிபு நேரவேண்டாமெனின்
நாமுந்தான் இக்கம்பர் செய்யுளைச் சற்றுத் திரித்துக்
கொண்டாலென். "வஞ்சனை பண்டு மடந்தை வேட
மென்று தஞ்சு என மாதரைத்தக்கோர் உள்ளலார்"
என்று அந்வயிக்குங்கால், "வஞ்சனை உடையவள்
போல் கைகேசி இங்குத் தோன்றுகின்றாளாயினும்
உள்ளத்தில் விடமில்லாத் தன்மையை உணர்வோம்.
இப்படியே வஞ்சனையுடையவர்கள்போல் தோன்றிப்
பழிப்பிற்குப் பாத்திரமாகின்ற பிற மாதர்களின்
செய்கைகளையும் உய்த்துணர்ந்து ஆராய்ந்தால், கள்ள
மற்றவர்களாய் அவர் நிகழ்கின்ற தன்மை உணரப்
பெறும். ஆதலின் வெளித்தோற்றத்தைக்கடந்து உட்
சென்று ஆராயும் அறிவிலாமனிதர், "வஞ்சனை பண்டு
மடந்தை வேடம்" என்றென்று பலபடிபேசலாமா
யினும் தக்கோர்களோ மாதரை ஒருபோதும்அவ்வண்
ணம் எளிதில் எண்ணமாட்டார்,'' எனப் பொரு
ளெய்த இயன்றதாகின்றது. எனின், கம்பரும் மாத
ரைப் பழித்ததாகாது. மாதரைப் பழித்தார் என்னும்
பழிக்கு அவரும் ஆளாகார்.

இங்நிலை நின்றவ டன்னை யெய்த நோக்கி
நெய்ங்நிலை வேலவ னீதி சைத்த துண்டோ
பொய்ங்நிலை யோர்கள் புணர்த்த வஞ்ச முண்டோ
அங்நிலை சொல்லென தாணை யுண்மை யென்றான்

[இப்படி வஞ்சனைபண்டு மடந்தைவேடமோ என்று மயங்
கும்படி நின்றகைகேசியை நெய்பூசிய வேலாயுதத்தை ஏந்
திய தயரதன், உற்றுநோக்கி, ''நீதிகைத்து விட்டாயோ,
அல்லது பொய்யுடையவர் உனக்குக் கற்பித்துச் சொல்லிய
வஞ்சனை ஏதேனுமுளதோ, அதனை என்மேலாணை உண்மை
யாகச் சொல்'' என்றான்.]

"யாரேனு முனக்கிவ் வஞ்சனையைக் கற்பித்
தனரோ" எனத் தயரதன் வான்மீகத்தின் கண்ணும்
கைகேசியை வினவுகின்றான். கூனியின் கற்பனை
இதுவென்று நெஞ்சறிந்து நின்ற கைகேயி, 'வாய்மை
யைக் காத்துநில் மன்னவ' என்று வற்புறுத்தும் நாவி
னால், அதனை மறுத்து "யாரும் எனக்கிவ்வஞ்சனை
யைக் கற்பித்தாரலர்" எனப்புகல மாட்டாதவளாய்
இதற்கு யாதும் பதிலுரையாமல் வாளாவிருந்து
விட்டனள். கம்பரிலோ,

திசைத்தது மில்லை யெனக்கு வந்து தீயோ
ரிசைத்தது மில்லைமு னீந்த விவ்வ ரங்கள்
குசைப்பரி யோய்தரி னின்று கொள்வெ னன்றேல்
வசைப்பொருள் நின்வயி னிற்க மாள்வெ னென்றாள்.

[நான் திகைக்கவுமில்லை; எனக்குவந்து தீயவர் ஒன்றும்
உரைத்ததுமில்லை. கடிவாளத்தையுடைய குதிரையை உடை
யவனே, நீவாக்களித்த இவ்வரங்களை இன்று கொடுத்தால்
கொள்வேன், இல்லையேல் பழியே உன்னிடத்தில் நிலைத்
திருக்க யான் சாவேன், என்றாள்,]

இந்த வாசக அமைப்பில் பொய்யெனிற் பொய்யு
முளது, மெய்யெனில் உரையளவு மெய்யென்றுங்
கொள்ளலாம். "பொய்ங்நிலையோர்கள் புணர்ந்த வஞ்ச
முண்டோ" என்று வினவினன் தயரதன். "தீயோர்
இசைத்ததுமில்லை" என்று கைகேயி எதிர் உரைத்
தனள். "இசைத்தனர், ஆனால் அவர் நீகருதும் வண்
ணம் தீயோர்—பொய்ங்நிலையோர்கள்—அல்லர்" என்
னும் அமைதி இவ்வழக்கினுள் கரந்து கிடக்கின்றது.
இசைத்தவர் தீயோரலராகில் வஞ்சனை விளம்பா
மலே விலக்கப்படுகின்றது.

கலா நிலயத்தின் வளர்ச்சியைக் கருதி நமது துணைஆசிரியர் ஸ்ரீமான்
K. ராஜகோபாலன் அவர்கள் மலாய் நாடுகளுக்குப் பிரயாணமாவார். அக்
காலை, அவரது கருமம் செவ்வனே முற்றும் வழி இயன்றன செய்து
எமக்கு உதவி தருமாறு கலா நிலய நேயர்களையும், மற்றத் தமிழ் அன்பர்களை
யும் கேட்டுக்கொள்கின்றேன். ஆசிரியர்.

நோயற்ற :: :: வாழ்வே

ஆரோக்கிய வாழ்க்கைக்கேற்ற இரு அருமருந்துகள்

குறைவற்ற : :- செல்வம்

"ஸித்தகல்ப மகரத்துஜம்"

(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளை நீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம்மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஔஷதத்தின் பெருமையைப் போற்றாத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபக சக்தி பெறவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா **10**

"மஹா சந்தனாதித் தைலம்"

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபக சக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக்கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

உங்கள் நரம்புகளையும், தேகத்தையும் பலப்படுத்தவும், ஞாபக சக்தியைப் பெறவும், நோய்களிலிருந்துவிடுதலையடைந்து ஆரோக்கிய சுயராஜ்யத்தைப் பெறவும் சுலபமான வழி,

ஆயுர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் N. V. ஸ்ரீ ராமாசார்லு அவர்களின்

இணையற்ற ஔஷதங்களிலேயே இருக்கின்றது. அவைகளை உபயோகித்து இன்ப வாழ்வு நடத்தச் சிறிதுந் தயங்காதீர்கள்.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட் சென்னை.

தபால் பெட்டி 151, சென்னை. கேட்லாக் இனாம். தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A.B.L. ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

இனாம்! இனாம்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்றாத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,
1/94, சைனா பஜார், மதராஸ்.

அரசாங்க இஞ்சினியர்களால் மதிக்கப்பெற்ற

மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் :: :: அதன் அநுபவப் பயிற்சி முறையும்

முதல் பதிப்பு விலை ரூபா 1. இரண்டாம் பதிப்பு 50 படங்களுடன் 200 பக்கங்கள் விலை ரூபா 2. தபால் சார்ஜு வேறு. வெளிநாடு ஆர்டர்களுக்கு முன்பணம் அனுப்பவேண்டும். ஏஜண்டுகள் தேவை.

எங்கள் மோட்டார் ஸ்கூல் 1916ஹு ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெகானிஸம் கற்றுக்கொடுத்துக் கவர்ன்மெண்டிலசென்ஸும் பாடசாலைச் சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென்னிந்தியா
மோட்டார் இஞ்சினீரிங் ஒர்க்ஸ் **&** பாடசாலை,
மைலாப்பூர் :: சென்னை.

Estd. NATIONAL **1906**

INSURANCE COMPANY LIMITED.

Head Office:-**9, Old Court House St., Calcutta.**

Before taking out a life assurance policy it is better to apply all the rigid tests for a good company.

The "National" will surpass any other Company in these tests,

(1) Indian Capital-Indian Management for the benefit of Indians.
(2) The Company has never contested a claim on a technicality.
(3) The low safe rates of premium provide maximum assurance at minimum cost.

The "National" keeps well ahead of the times and its policy of 'fair and square dealing' which began with its founding, ever since 1906, has been continuous.

For Particulars & Agency terms.
Apply to :— R. G. DAS & CO., *Managers.*
T. ANANTACHARI, B.A.,
Branch Secretary.

NATIONAL INSURANCE COMPANY LTD.,
Madras Branch, Loane Square,
Broadway, Madras.

HAIL & CO

HALFTONE & LINE BLOCK MAKERS

THE BEST & FINEST HOUSE for HALFTONE & LINE BLOCKS on COPPER & ZINC.

CINEMA SLIDES AND DESIGNS Etc A SPECIALITY.

285. CHINA BAZAR ROAD.. Opposite Telephone House MADRAS.

Write for Particulars.

— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு
மகிழ்ச்சியையும்
ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்
எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.

எழும்பூர். :: :: சென்னை.

அசோகா சால்ட்

(ரிஜிஸ்டர்ட்)

(அசோகா உப்பு)

ஆரோக்கியத்தைப் பாதுகாக்கவும் நோய்கள் வாராமல் தடுக்கவும் அசோகா உப்பு ஓர் அரிய மருந்து.

உணவை நன்ருகச் செரிக்கச்செய்து யாதொரு வருத்தமின்றி நாள்தோறும் மலத்தைக்கழிக்கும் சிறந்த குணமுடையது.

அஜீர்ணம், பித்தவாயு, புளி ஏப்பம், குலை எரிச்சல், வயிற்றுவலி, குன்மம், மார்புவலி, இடுப்புநோய், தலைமயக்கம் முதலிய நோய்களை நீக்க வல்லது. பாண்டு, சோகை, காமாலை, ஜுரம், மகோதரம், அஜீர்ணம், பேதி, கணைச்சூடு, வெட்டைச்சூடு, மூலம், கரப்பான், சிரங்கு, குடல் கிருமி, மலச்சிக்கல், போன்ற நோய்களைப்போக்கி எவ்விதப் பிணியும் அணுகாமல் காக்கக் கூடியது அசோகா உப்பே யாகும்.

விலை ரூ **1-8-0** தபால்செலவு வேறு.

அசோகா கம்பெனி,
லிமிடெட், சென்னை.

நம்பிக்கையுள்ள - - - ஔஷதம்

அஜீரணம், மலச்சிக்கல், தேக அசதி, ஞாபகக்குறைவு, நரம்புகளின் தளர்ச்சி முதலிய வியாதிகளுக்கு எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

நம்பிக்கையுள்ள ஔஷதம். ஆயிரக் கணக்கான ஜனங்கள் உபயோகித்துக் குணத்தை யடைந்திருக்கிருர்கள். நீங்களும் உபயோகித்துக் குணத்தை யடையுங்கள்.

32-மாத்திரைகளடங்கிய
டப்பி 1-க்கு விலை ரூ. 1

கேட்லாக் இனம்!

ஆதங்க நிக்ரஹ
ஔஷதாலயம்,
26, பிராட்வே,
சென்னை.

வைத்திய ரத்ன பண்டிட்
டி. கோபாலாசார்லு அவர்களின்

ஜீவாமிருதம்,

(இன்ப வாழ்க்கைக்கு ஏற்ற ஔஷதம்)

சென்ற 33ஆண்டுகளாகப் பலராலும் மிகவும்போற்றப்படும் அரிய டானிக் இதுவே. சுத்தமான விலையுயர்ந்த மூலிகைகளினுலும், லோக சத்துக்களாலும் கோடிக்கணக்கான இந்தியர்களின் பலஹீனத்தையுக் கஷ்டங்களையும் போக்கி இன்பத்தை அளிக்கப் பண்டிட்ஜி அவர்களால் மிகவும் சிறந்த முறையில் தயாரிக்கப்பட்ட உயர்ந்த மருந்து. பலஹீனம், நரம்புத் தளர்ச்சி, அஜீரணம், காதிரைச்சல், மலச்சிக்கல், ஞாபகமின்மை, சோகை, முதலியஎல்லாநோய்களையும்நீக்கித் தேகத்திற்கு வலுவையும், மூளைக்குச்சுறுசுறுப்பையும், முகத்திற்கு அழகையும் கொடுக்கக் கூடியது. எல்லா இடங்களிலும் கிடைக்கும். கியாட்லாக் இனம்.

புட்டி 1-க்கு விலை ரூ. 3—4—0

எல்லா விடங்களிலும் கிடைக்கும். விபர காட்லாக் இனம்.

தந்தி விலாசம்:— "பண்டிட்" டெலிபோன் நெ:- 2191

தபாற் பெட்டி நெ: — 287.

ஆயுர்வேத ஆஸ்ரமம்,
151, கோவிந்தப்ப நாயகன் தெரு,
ஜி. டி. சென்னை.

அருமையான பொடி! 32 தங்கமெடல்கள் பரிசுபெற்ற உடனே ஆர்டர் செய்யுங்கள்!!

பட்டணம் பொடிக்களஞ்சியம் பட்டணம்பொடி

காரம், மணம், குணம், சுகம், நிறம், வாடை இவை ஆறும் அமைந்துள்ளது.
விலை விபரத்திற்கு எழுதுக.

பட்டணம் பொடிக்களஞ்சியம்,
147, கோவிந்தப்ப நாயகன் தெரு, மதராஸ்.

தபால் பெட்டி, நெ:—156

புரொப்ரைடர்:— ஷண்முக முதலியார் பௌத்திரர்,
R. K. ஜெயராம் முதலியார்.

சமையல் - -
சுகம் - -
வேண்டுமானல்

ருக்மணி குக்கர்

வேண்டும்

இது நாடறிந்த விஷயம். அனுபவசாலிகள் தம் செயலைப் பின்பற்றி நீங்களும் ஒரு அடுக்கு வாங்குங்கள்.

1, 2, 4, 6, 8, 12, 16 பேர்களுக்குரிய ஏழு அடுக்குகள் ரூ.12, 16, 20, 25, 31, 37, 44.
விபர புத்தகம் இனம்.

ருக்மணி குக்கர் கம்பெனி,
இராயப்புரம் (12) சென்னை.

தமிழ் நீதிப் போர்டுகள்

(Tamil Wisdom Boards)

'அறஞ் செயவிரும்பு', 'இன் சொல் இயம்பு' என்பவை போன்ற 25 நீதிகள் 13″ × 8½″ அளவில் அச்சிட்டுக் கலிக்காவினல் விளிம்பு கோத்த கனத்த அட்டையில் ஒட்டப்பெற்றிருக்கின்றன. கல்லூரிகட்கும், வாசகசாலைகட்கும், நூல்நிலையங்கட்கும், வீடுகட்கும் வேண்டப்படுவன.

		ரு.	அ.
தனி நீதி அட்டை விலை		0	3
12 நீதி அட்டைகள்	,,	2	0
ஒரு செட் 25 நீதி	,,	4	0

சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகம்
லிமிடெட்,
6, பவளக்காரத் தெரு, சென்னை.

செந்தமிழ்ச் செல்வி

ஒன்பதாவது ஆண்டு

ஓர் அரிய செந்தமிழ் மாதப்பத்திரிகை. 10-2-31முதல் வெளிவருகின்றது. மாதிரிப் பிரதி விலை அணா 2. ஆண்டு சந்தா ரூ. 3.

பிரசோற்பத்தி வருட சைவப்பஞ்சாங்கம்

தனிப்பிரதி விலை அணா 1½. கிளேஸ் அணா 2. வியாபாரிகட்குத் தக்க கழிவு தரப்படும்.

செந்தமிழ்ச் செல்வி ஆபீசு,
6. பவளக்காரத் தெரு, சென்னை.

வித்வான் த. சண்முக கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,
வண்ணாரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.



உயர்ந்ததும், சிறந்ததுமான மூக்குக் கண்ணாடிகள் வாங்குவதற்கு உத்தரவாத முள்ள இடம்இதுவே.

விலைகள் சரசம், புதுமாதிரியான கண்ணாடிகள் எப்பொழுதும் கைவச மிருக்கின்றன. மாணவர்களுக்கு ஸ்பெஷல் கமிஷன் கொடுக்கப்படும். விலை விபரத்திற்கு எழுதுக.

எம். ஏ. சாரி அண்டு கோ., மூக்குக்கண்ணாடி வியாபாரிகள், நெ. 8. பிராட்வே, சென்னை.

என். ஜே. தேசாய்ஸ்

உயரிய உத்திரவாதமுள்ள

கஸ்தூரி

மாத்திரையையே

எப்போழுதும் உபயோகியுங்கள்.
ஆண், பெண், குழந்தைகளுக்கு
இன்றியமையாத
ஓர் சிறந்த டானிக்
250 மாத்திரை கோண்ட
புட்டி அணு 6. டஜன் நுபா 3.
தபாற் கூலி இனம்.

24-மணி நேரத்தில் ஆச்சரிய குணம்!!!
உயரிய உத்திரவாதமுள்ள

சர்வ படை மருந்து

டப்பி 1-க்கு விலை அணு 6. டஜன் நுபா 3.
தபாற் கூலி இனம்.

மிகுந்த மணம்! சிறந்த குணம்!!

- பால் பெருங்காயத்தை -
உபயோகியுங்கள்.

கருப்புப் பெருங்காயம் ஒருவீசை உபயோகிப்பதற்கு இது ஒரு தோலாஉபயோகித்தால் போதுமானது. டப்பி 1-க்கு விலை அணு 4. டஜன் ரூபா 3. தபாற் கூலி இனம்.

சிறந்த நோய் நிவாரணி

ஆர்யாஞ்ஜன்

எல்லா வலிகளையும்,
வீக்கங்களையும், நோய்
களையும் நீக்குவதில்
ஒப்புயர்வற்றது.
புட்டி 1-க்கு விலை அணு 8.

எல்லா இடங்களிலும் கிடைக்கும். 88, தங்கசாலை வீதி, சென்னை.

N. B. விபர கேட்லாக்கிற்கு எழுதவும். சென்னைக்கும் வெளியூருக்கும் விற்பனை வியாபாரிகளும், கான்வாஸர்களும் தேவை. கடிதங்கள் இங்கிலீஷில் எழுதுக.

பி. வி. ராஜன் பட்டணம் பொடி

காரம், மணம், குணம், நிறம் வாசனைகளால் மேன்மையுற்றது. நெ. 1 ஸ்பெஷல் ரகம் பொடி-வீசை ரூ-4. ஷிசாதா ரகம்பொடி வீசை ரூபா 3½. டாக்டர் B. S. மல்லையா M. B., & C.M., & M.L C. அவர்கள் பரிசோதித்த R.S. சுகந்த மூக்குத்தூள் விலை பாட்டில் 1-க்குஅணு 4. டஜன் ரூபா 2¼ ஷிஒரு சேர்டின் ரூபா 1¾ வி பி. ரயில் சார்ஜ் வேறு. பி. வி. ராஜன் அண்டு கம்பெனி,
நெ.44 கோவிந்தப்ப நாயக்கன் வீதி, மதராஸ்.
தந்தி விலாசம் "நஸ்யம்"

ராமுலு—13

		Rs.	As.
1.	ஸங்கீத சிந்தாமணி	3	0
2.	திராவிட கானம்	3	0
3.	ஸங்கீத சில்லரைக்கோர்வை	3	0
4.	கீர்த்தன ரத்னங்கள்	1	4
5.	சங்கீதத் திருப்புகழ்	0	8
6.	ராஜேந்திர மோஹனு	1	0
7.	திகம்பர சாமியார் பால்ய லீலைகள் ...	5	0
8.	ரமாமணி	2	0
9.	சரோஜனி	2	0
10.	வசீகரண தந்த்ரம்	2	0
11.	அநுபவ சிந்தாமணி	1	0
12.	Kissing in Practice	2	0
13.	Fruits of Married Love	0	12

காலண்டர், கேட்லாக் இனம்!

M.S. ராமுலு & கம்பெனி, ராயபுரம், மதராஸ்.

: : பிரபல ஜோதிஷர் : :

மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர்.

ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ- 5. ஒரு வருஷ பலன் ஏழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணு 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணு 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீனிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

வர்த்தமானம்

"சென்றவார இறுதியில் சென்னை கோக்கலே மண்டபத்தில் சிறையினின்று விடுதலை பெற்று வந்த ஸ்ரீமான் சக்ரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார் ஒரு பிரசங்கம் செய்தார். அக்கூட்டத்திற்கு மிகுந்த ஜனங்கள் வந்திருந்தனர். கூட்டம் முடிந்ததும் ஸ்ரீமான் இராஜகோபாலாச்சாரியார் தமது சட்டைப்பையில் வைத்திருந்த ரூ. 300. காணுது போய் விட்டதைக் கண்டு வருந்தினர்," என்று தெரிகின்றது.

***

சென்னையில் பரதேசித் துணி பகிஷ்கார முயற்சி நடந்து வருகின்றது. கல்லிடைக் குறிச்சியில் இருக்கும் டாக்டர் சங்கரஐயரின் மனைவியார் ஸ்ரீமதி லக்ஷ்மியம்மாள் சில தொண்டர்களுடன் சென்று கிடங்குத் தெருவில் மறியல்செய்யப் போலீசார் அவரைக் கைது செய்தனர். அந்த அம்மாளுக்கு மாஜிஸ்டிரேட் 6 மாத காவல் தண்டனை விதித்துளார்.

***

உப்புவரியைப் பற்றி ஆலோசித்து ஒரு முடிவு செய்ய இந்தியச் சட்ட சபையார் ஒரு கமிட்டியை நியமித்துள்ளனர்:—ஹித்சாட்டு, பீ. தாஸ், அங்கேச்வார், ஆர். கே. ஷண்முகம் செட்டியார், சி. விஸ்வாஸ், ஜி. மார்கன், ஷேயித் அப்துல்லா ஹரூன், ஷி. மித்ரா ஆகிய இவர்கள் கமிட்டியின் அங்கத்தினராவர்.

***

சென்னைராஜதானியில் 1930வது வருட முடிவு வரை சத்தியாகிரஹம் செய்த குற்றத்திற்காகச் சிறை சென்றவர்களில் 1347 பேர் மன்னிப்புக் கேட்டுக் கொண்டு விடுதலைபெற்றனர் என்று அரசாங்க அறிக்கை கூறுகின்றது.

***

விளைதற்குரிய எல்லாச்சுந்ததிரத்தையும் பெற்ற ஜப்பான் நாட்டில் பஞ்சத்தின் மிகுதியால் ஜனங்கள் கஷ்டப்படுகின்றனராம். ஒரு தாய் தனது குழந்தையின் பசியை ஆற்றுவிக்கும்பொருட்டுத் தனது தலைமயிரை வெட்டி அதை விற்றுவரச் சென்றனளாம் இவள்போல் கஷ்டப்படும் மற்றொரு மாது அம் மயிரைக் கவர்ந்து சென்றனளாம்.

***

"அமெரிக்கா ஐக்கியநாட்டில் ரிகோ என்றவொரு ஊர் இருக்கிறது. அந்த ஊரின் ஜனத்தொகை 18,000. அங்கே ஜனத்தொகை குறைவாயிருந்தாலும் 47 உயர்தர ஹோட்டல்களும், 35 விழா மண்டபங்களும், 150 வழக்குவாதிகளும் இருக்கின்றனர். அந்த ஊரில் 1930 வருஷத்தில் 2080 விவாக ரத்து நடந்துளதாம். அதிகமானவர்கள் விவாஹமிலாது ஹோட்டல்களில் வாழ்கின்றனர். அந்த ஊரில் அதிர்ஷ்டசாலிகள் குழந்தைகளே. ஏனெனில் ஒவ்வொரு குழந்தைக்கும் குறைந்தது இரண்டு மூன்று தகப்பன்மார் இருப்பார்களாம்." என்று ஒரு அமெரிக்காச் செய்தி கூறுகின்றது.

***

1931-ம் வருஷம் ஜனவரி மாதம் 17ந் தேதியோடு முடிவுறும் ஒரு வருஷத்தில் இந்தியாவிலுள்ள இருப்புப் பாதைகளின் மொத்த வருமானம் 73 கோடியே 61 லக்ஷ ரூபாயாம். அதற்கு முன்வருடத்தைவிட இந்த வருடத்தில் 20லட்சம் ரூபா வருமானக் குறைவாம். இதற்குக் காரணம் சத்யாக்கிரஹ இயக்கம் என்று சொல்லப்படுகின்றதாம்.

***

சமீபத்தில் தென்ஆப்பிரிக்காவில் காலஞ்சென்ற ஸ்ர் ஒல்ட் பீல்டு என்பவர் எட்வர்ட் வைத்தியசாலைக்கென 50 ஆயிரம் பொன்னும், ஏகாதிபத்ய சாஸ்திரக் கலாசாலைக்கென 25 ஆயிரம் பொன்னும் தர்மம் செய்துள்ளாராம். அவர் இதுவரை 24லட்சம் பொன்னைத் தர்மத்திற்கெனச் செலவு செய்துள்ளாராம்.

***

பிப்ரவரி மாதம் முதல் தேதியன்று காந்தி யடிகள் ஆமதாபாத்தில் செய்தவொரு பிரசங்கத்தின் சுருக்கம் வருமாறு:—

இப்பொழுது இந்தியா நடத்திவரும் சத்தியப் போரில் அஹிம்ஸா தர்மம் விளங்கிவருகின்றது. இந்திய மாதர்களும் அஹிம்ஸா தர்மத்தை யறிந்து போரில் கலந்து செய்துவரும் தியாகம் என்னை மகிழச் செய்கின்றது. மாதர்துணை நலம் நமது விடுதலை இயக்கத்திற்கு ஏற்பட்டதால் நமது மாதர் பெருமையோடு நமது நாட்டின் பெருமையும் அதிகரித்து வருகின்றது. நாம் இனியும் சத்தியத்தையும் அஹிம்ஸையையும் கடைப்பிடித்து விடா முயற்சியுடன் முயல்வோமாயின் கடவுள் நமக்கு வெற்றியை அளிப்பார் என்பதிற் சந்தேகமில்லை. நமது இயக்கத்தில் எல்லா வகுப்பினரும் எல்லா மதத்தினரும் சேர்ந்துளதால் வகுப்புவாதமும் மதத்துவேஷமும் அகன்று வருகின்றன. நாம் வெற்றிபெறுவதற்கு வகுப்பு வாதம் ஒழியவேண்டும். அது ஒழிவதற்கு சத்தியமும் அஹிம்ஸையும்தான் கருவி என்பதை எவரும் மறத்தலாகாது. இதுவரை நீங்கள் அஹிம்ஸையைக் கைப்பற்றி வந்துள்ளீர்கள். இந்நெறிகடந்து எக்கருமம் முயல்வோமாயினும் நாம் அழியவேண்டியதுதான். ஆகவே நாம் ஆரம்பத்தில் பூண்ட அஹிம்ஸை விரதத்தை இனிமேலும் பூண்டு வெற்றிவரும் வரையில் முயல்வோமாஞல், நமது காரியம் சித்தியாகும். இல்லையேல் உலகமும் கடவுளும் நம்மை மோசக்காரர் என்று அழைக்கும். இத்துடன் நாம் நிற்றல் போதாது. ராட்டினமும் நமது கை கழலக்கூடாது. எல்லோரும் கதரையே அணிய வேண்டும் அஹிம்ஸையும் ராட்டினமும், கதரும் நம்மையும் நமது நாட்டையும் உயர்த்திவைக்க வல்லன. இதுவே நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவது.

* * *

'கிறிஸ்திய மதத்தார் பிரேதத்தைப் புதைத்துவிடுவது வழக்கம். சிலகாலமாக இந்துக்களைப்போல் தகனம் செய்யும் வழக்கம் ஐரோப்பாவில் சிற்சில விடங்களில் ஏற்படலாயிற்று. இப்பொழுது ஜெர்மனியில் தகனமுறை விரைவாகப் பெருகி வருகின்றது. சுகாதார ஆராய்ச்சி வல்லுநரும் தகனமுறையை ஆதரிக்கின்றனராம்' என்று ஐரோப்பியச் செய்திபொன்று கூறுகின்றது.

KALANILAYAM.
REG. NO. M, 2324.

கலா நிலயம்

1-ஆவது வால்யூம் 1928-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. சேக்கிழாரும் திருக்கண்ணப்பரும் :— கட்டுரைகள் 51.
2. கம்ப ராமாயணம் :— பால காண்டம் ஆற்றுப்படல முதல் மிதிலைக்காட்சிப் படலம்வரை கட்டுரைகள் 51.
3. அகப்பொருள் வரலாறு:—காட்சி முதல், ஓதற் பிரிவுவரை, கட்டுரைகள் 18.
4. காந்தார நாட்டுக் கட்டழகி :—காவிய வியல் நயம் பெற்ற நற்றமிழ் நாவல் 51 இதழ்களில் வந்துளது.
5. தமிழ்ப் பாடம் :—நளவெண்பா, சுயம் வர காண்டம் முதல் கலிதொடர் காண்டம் முடிய, 52 இதழ்களில் வந்துளது.
6. தேவாரமும் ஐந்திணையும்:—தமிழ் இலக்கண ஐந்திணைப் பாகுபாட்டைத் தேவாரத்தின் துணைகொண்டு விளக்கிய கட்டுரைகள்.
7. வானசாஸ்திரம் :—வான சாஸ்திர வுண்மையை யாவரும் அறியுமாறு வரையப்பட்ட கட்டுரைகள் 20.

மலர்வனம் பழமுதிர்சோலை, மேனாட்டுத் தத்துவ அறிஞர்களாய பிரடரிக்நிஷேயன், எபிகூரன், ஜினேன், பைரோன், அரிஸ்டாட்டில் முதலானோர் தத்துவ ஆராய்ச்சி, இலக்கிய ஏற்ற ஆராய்ச்சியென்ற இலக்கியங்களை ஆயும் முறை விளக்கும் 6 கட்டுரைகள், கார்லைல் எமர்ஸன், ரஸ்கின், டால்ஸ்டாய், ஆஸ்கார் ஒயில்ட், ராபர்ட் பர்ன்ஸ் ஆனோர் கட்டுரை மொழிபெயர்ப்பு, இலக்கியக்கதைகள், நாலடி நானூற்றின் திறம், பாரசீகப் புலவர் உமார் கயாம் காட்டிவைக்கும் தத்துவநிலை, முதலிய பல வியாசங்கள்.

2-ஆவது வால்யூம் 1929-ஆம் ஆண்டுப் பிரதிகள்

1. கம்பராமாயணம் :—மிதிலைக்காட்சிப் படலம் முதல் பரசுராமப்படலம் முடிய 48 கட்டுரைகள்.
2. அப்பர்:—கட்டுரைகள் 50
3. வில்லி பாரதம்:—ஆதிபர்வமுதல் சபாபர்வம் வரை கட்டுரை 32.
4. ஏமாங்கதத்திளவரசன் :—காவிய நலம் பெற்ற காதற் கதை. 20 இதழ்களில் வந்துளது.
5. அகப்பொருள் வரலாறு:—காவற் பிரிவு, பொருள்வயின் பிரிவு, பரத்தையிற் பிரிவு கட்டுரைகள் 6.
6. மாறன் பாப் பாவினம்:—16 இதழ்களில் வந்துளது.
7. குலசேகரர்:—குலசேகரர் தத்துவத்தை விளக்கும் கட்டுரைகள் 23.
8. தமிழ்ப்பாடம்:—நளவெண்பா கலிநீங்கு காண்டம், திருவேங்கடமாலை, திருவரங்கத்துமாலை, திருவரங்கத்தந்தாதி, திருவரங்கக் கலம்பகம், 50 இதழ்களிலும் வந்துளது.
9. நம்மாழ்வார் வைபவம்:— கட்டுரைகள் 12.

மானத சாத்திரம், மொழிபெயர்ப்புக் கட்டுரைகள் 11, அண்டபுராணம் - காப்பி, தேயிலை புகையிலைமுதலிய சிறப்புப் படலங்கள் 5, மலர்வனம் 8, பழமுதிர்சோலை, திருவாய்மொழியின் திறம், கண்கண்டதெய்வம், உடலும் மனமும், நன்னெறியின் ஏற்றம், சிந்தாமணி நீதிச் செய்யுள் ஆய பல கட்டுரைகள்.

3-வது வால்யூம் 1930-ஆம் ஆண்டுப் பிரதிகள்.

1. கம்பராமாயணம்:— மந்திரப்படலம், மந்தரை சூழ்ச்சிப் படலம் கட்டுரை 48.
2. குறுந்தொகை:— 400 பாட்டுகளும் உரையுடன் 34.
3. தமிழ்ப்பாடம்:—கிருஷ்ணன் தூது, நைடதம், நளன் தூதுப் படலம். இலக்கணம் புணரியல் முற்றப்பெற்றது.
4. அப்பரும் 64 கலைகளும்:—36.
5. நம்மாழ்வார் வைபவம்:—34.
6. இலஞ்சிப்பாவை: —இதழ்கள் 24.
7. ஆச்சரிய சூடாமணி: —(ஒரு மொழிபெயர்ப்பு நாடகம்) 15.
8. மானதசாத்திரம்:—(நடத்தை) 32. மொழிபெயர்ப்புக் கட்டுரைகள், சிறுகதைகள், மலர்வனம், பழமுதிர்சோலை, மாதவிமாதவம் ஆகிய பல கட்டுரைகள்.

மேற்கூறிய மூன்று வருடப் பிரதிகளும் எம்மிடம் பயிண்டு செய்தும், செய்யாமலும் கிடைக்கும்.

விலை விவரம்:—தபால் செலவு உள்பட, வால்யூம் ஒன்றிற்கு

உள்நாடு	ரூ.	அ.	ப.	வெளிநாடு	ரூ.	அ.	ப.
பையிண்டு செய்யாதது	8	0	0	பையிண்டு செய்யாதது	9	8	0
காலிகோ கில்ட்	9	8	0	காலிகோ கில்ட்	11	0	0
ஆப்லெதர் கில்ட்	10	0	0	ஆப்லெதர் கில்ட்	11	8	0

:: கலாநிலயம் ஆபீஸ், புரசைபாக்கம், சென்னை ::

•Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)